விலை சதம் 50

★ ★

பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகை
களுக்கும் கோயிப் புரியாணி
நாடிலஸ், [illegible]
[illegible]
வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

ஈழநாடு
வார மலர்
THE EELA NADU VARAMALAR

மில்க்வைற் செய்தி
வெளியீடு-17
15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 மெடிக்கேட்டற் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
விநியோகப்பகுதி
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண் — 77
யாழ்ப்பாணம்.

மலர் 19 சித்திரை 26 ஜ: அவ் 18 ஞாயிற்றுக்கிழமை [8—5—77] இதழ் 86

கூட்டணியில் பல சிக்கல்கள்!

அரசியலிலிருந்து சிலர் ஒதுங்கலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கூட்டணி அபேட்சகர்கள் நியமனம் தொடர்பாக, ஏற்கனவே இருந்துவந்த பலதரப்பட்ட பிரச்னைகளுடன், புதிய கோணங்களிலிருந்தும் பல தாக்கங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம் எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

தமிழ் காங்கிரஸ் குறைந்த பட்சக் கோரிக்கையாக 5 தொகுதிகளை தரவேண்டும் என்று கோரியதுடன், தமிழ்க் காங்கிரஸ் ஐவர்குழு, கூட்டணித் தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளது.

காங்கேசனில் யார்?

மூதறிஞர் செல்வாவின் மறைவைத் தொடர்ந்து, காங்கேசன்துறைத்தொகுதியிலும், புதிதாக பிரச்னை உருவாகியுள்ளது. இத் தொகுதிபும், தாங்கள் கோரும் 5 தொகுதிகளுக்குள் ஒன்றாக இருக்கவேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

10 தொகுதிகளில் சுயேச்சையாக

தமிழ்க் காங்கிரசுக்கு 5 தொகுதிகள் வழங்காத பட்சத்தில், கூட்டணி வழங்கும், மூன்றோ அல்லது நான்கோ தொகுதிகளை ஏற்றுக்கொண்டு, வடக்கிலுள்ள 10 தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்கள், சுயேச்சையாக போட்டியிட வேண்டும் என்ற கருத்து, தமிழ் காங்கிரஸ் வட்டாரங்களில் வலுவடைந்து வருகிறது. சில தொகுதிகளில் பிரசார வேலைகளும் ஆரம்பித்துவிட்டது.

நல்லூரில் புதிய பிரச்னைகள்

நல்லூர் தொகுதியில் கூட்டணி சார்பில் திரு.எம். சிவசிதம்பரமே நிறுத்தப்படுவார் என்பது பெரும்பாலும் உறுதியாகியுள்ளதால், அங்கும் பல புதிய பிரச்னைகள் தோன்றியுள்ளது. அபேட்சகர் நியமனங்களைத் தொடர்ந்து சிலர் அரசியலுக்கே முழுக்குப் போடக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுறது.

பருத்தித்துறையில் பிரசாரம்

பருத்தித்துறைத் தொகுதியில் கூட்டணி அபேட்சகர் திரு.கே துரைரத்தினம், திரு. குமார் பொன்னம்பலம், திரு. வீரவாகு, பருத்தித்துறை நகர சபைத்தலைவர் திரு. என். நடராசா ஆசியோர் தேர்தல் பிரசாரத்தில் இறங்கிவிட்டார்கள். தேர்தல் கருத்தரங்குகளும், சிறு கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

பருத்தித்துறைத் தொகுதியைச்சேர்ந்த இளைஞர் கோஷ்டியொன்று, நேற்றுக் காலை கூட்டணித்தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

வவனியாத் தொகுதியில் திரு. தா. சிவசிதம்பரமும், முல்லைத்தீவில் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவும், கூட்டணி அபேட்சகர்களாக நிறுத்தப்படுவார்கள் என்பது பெரும்பாலும், உறுதியாகிவிட்டது.

மன்னாரில்

மன்னார் தொகுதியில், கூட்டணி அபேட்சகராக நியமிக்கப்பட்ட திரு. சூசைதாசனை வாபஸ் பெறுவதற்கான முயற்சிகளில், இளைஞர் பேரவையினர் ஈடுபட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் திரு. வி என். நவரத்தினமும், கோப்பாயில் திரு. எஸ். [illegible] வேலுப்பிள்ளையும், யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி வி. யோகேஸ்வரனும் கூட்டணி அபேட்சகராக நிறுத்தப்படுவார்கள் என்பதும் நிச்சயமாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

பொத்துவிலில் கவிஞர் காசி ஆனந்தன் அல்லது திரு. தங்கத்துரை கூட்டணிஅபேட்

(10-ம் பக்கம் பார்க்க)

15,000 பேர் கையெழுத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர்த் தொகுதியில் சட்டத்தரணி எம். ஆலால சுந்தரத்தையே கூட்டணி அபேட்சகராக நிறுத்தவேண்டும் எனச் சுமார் 15.000 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று கூட்டணித் தலைமைப்பீடத்திற்கு சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இளைஞர்கள் பலர் வீடு வீடாகச் சென்று திரு. எம். ஆலாலசுந்தரத்திற்கு ஆதரவாகக் கையெழுத்துத் திரட்டி வருகின்றார்கள்,

இதேசமயம், நல்லூர்த் தொகுதியில் கூட்டணி அபேட்சகராக யாரை நிறுத்த வேண்டும் எனத் தீர்மனித்து நியமனக் குழுவிற்கு சிபார்சு செய்வதற்காக இன்று பொதுக்கூட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

அரியாலை புறூடி இல்லத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அபேட்சகர் பற்றித்தீர்மானிக்கப்படவிருக்கிறதென்று அறிவிக்கப்படுகிறது. (க-இ)

75 வருடகால தமிழர் அரசியல் பிரச்னைகள்!

'சிங்களவர் - தமிழர் பிரச்னைக்கு எழுபத்தைந்து வருட காலமாக சகல யுக்திகளையும் கையாண்டு ஆகிவிட்டது. சட்டச்பையில் சமபல பிரதிநிதித்துவம் (ஐம்பதற்கு ஐம்பது) சமஷ்டி அரசியல் முறை, பிராந்தியசபைகள், மாவட்ட சபைகள் என்று இப்படியாக பலப் பல யோசனைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி ஆகிவிட்டது. கடைசியாக இப்பொபொழுது, நாம் பிரிந்து சுயாட்சி உரிமையும் இன்றை [illegible] கொண்ட தமிழ் இலங்கை நிறுவுவது ஒன்றே அழிவிலிருந்து நமது இனத்தைக் காத்துக்கொள்வதற்கு வழி என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்'

இப்படி எழுதுகிறார் தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம.

கடந்த எழுபத்தைந்து வருட காலச் சரித்திரத்தையும் இந்தக்காலத்தில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் பற்றி திரு. நவரத்தினம் ஆட்சிமன்றத்தில் 1968-ம் ஆண்டு நிகழ்த்திய உரை 'ஈழநாடு' விவாத மேடைக்கு நாளை 9-5-77-ல் வருகிறது.

அரசியல் இயக்கங்களில் ஈடுபடுபவர்களும் அரசியல் மாணவர்களும் அறிந்து கொள்ள வேண்டியவை நிறைய உண்டு.

நாளைய 'ஈழநாடு' பிரதிக்கு இன்றே ஏற்பாடுசெய்து கொள்ளுங்கள்.

புத்தூர் வங்கிக் கொள்ளை; இரு இளைஞருக்குறிமாண்ட்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

புத்தூர் வங்கிக்கொள்ளை தொடர்பாகப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களைக் கைது செய்துள்ளார்கள்.

இவ்வங்கியில் 2,75,000 ரொக்கப் பணமும், ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுவந்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் இம்மாதம் 18-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க)

ஆனைப்பந்தி பஸ் கொள்ளை:

இருவர் அடையாளம் காணப்பட்டனர்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைப்பந்தி பஸ் கொள்ளை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூவரில், அடையாள அணிவகுப்பில் இருவர் நேற்று இரு சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

கோப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸை முதலாம் திகதி இரவு 9 மணியளவில் காரில் வந்த கோஷ்டியினர் ஆனைப்பந்தியில் மறித்து 300 ரூபா ரொக்கப் பணமும், சாரதி, கண்டக்டர்களின் இரு கைக்கடிகாரங்களையும் கொள்ளையடித்ததாகப் புகார் செய்யப்பட்டிருந்தது.

பொலிசார் சந்தேகத்தின் பேரில் மூவரை கைதுசெய்தனர். யாழ். பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. 1-ம் சாட்சியான ஜேம்ஸ் அப்பு எட்வின், 1-ம் சந்தேக நபரான நாகநாதர் நவரத்தினத்தையும், 2-ம் சந்தேக நபர் பொன்னையா துரை ராஜராவையும் அடையாளம் காட்டினார்.

2-ம் சாட்சியான வேலாயுதபிள்ளை தனபாலன், 1-ம், 2-ம் சந்தேக நபர்களை அடையாளம் காட்டினார். மூன்றாவது சந்தேகநபரை சாட்சிகள் அடையாளம் காட்டவில்லை. (க-இ)

சுவீப் முடிவு

கொழும்பு, சனி

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 613-வது தேசிய சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு;

முதலாவது பரிசு
51 B 0507
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
41 N 0937
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
16 L 0843
ரூபா 10,000

(மிகுதி நாளை வெளிவரும்.) (இ)

துப்பாக்கி முனையில் முகமூடிக்காரர் கொள்ளை

சங்கானை ப. நோ. கூ. ச. கிளையில் சம்பவம்

சங்கானை, சனி

துப்பாக்கி முனையில் முகமூடி அணிந்த 4 பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்று ப. நோ. கூ. சங்கக் கிளை ஒன்றில் கொள்ளையடித்த சம்பவமொன்று சங்கானையில் நிகழ்ந்துள்ளது.

சங்கானை ப. நோ. கூ. ச. தொட்டிலடி கிளையில் நேற்று இரவு ஒரு மணியளவில் வந்த இக்கோஷ்டியினர் துப்பாக்கியைக் காட்டி காவலாளியைப் பயமுறுத்திவிட்டு ஓட்டைப் பிரித்து கடையினுள் இறங்கி அங்கிருந்த சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான புடவைகளையும் வேறு பல பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (இ)

கரடி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கத்தான் இந்தப்பொலிஸ் இலாகாவே இத்தனை ஆர்ப்பாட்டமெல்லாம் செய்ததா வென்று எண்ணிய மக்கள் 'கூய்! கூய்!' என்று விசில் அடித்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தையெல்லாம் ஒருவாறாக அடக்கி முடித்துவிட்டு உதவிக்குவந்த ராணுவ, கடற்படை வீரர்களையும் அனுப்பிவிட்டு பொலிஸ் அதிகாரி தமது வீரர்களையெல்லாம் நிலையத்திற்குத் திரும்பி ஓய்வெடுக்கும்படி உத்தரவிட்டார். பிறகு சர்க்கஸ் கம்பனி மனேஜரை அழைத்து நிலைமையைப் பற்றி ஆலோசனை நடத்தினர். இந்த நேரத்தில் பார்த்து சர்க்கஸ் கம்பனியிலிருந்து ஒருவர் கம்பனி மனேஜரைத தேடிக் கொண்டு அவசரமாக வந்தார்.

(தொடரும்)

.....

பேராசைக் –

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

ஐநூறு ரூபிள்களை வைத்திருங்கள். நானொரு வியாபாரியின் மனைவி. என்கணவர் பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டு கடன் வசூலிக்கச் சென்றுவிட்டார். நான் தனிமையில் இருப்பதால் திருடர்களிடம் பயமாயிருக்கிறது.''

''நல்லது மகளே நல்ல காரியம் செய்ய வந்திருக்கிறாய். உனக்கு இதைவிட பாதுகாப்பான வேறோர் இடம் கிடைக்காது. அத்துடன் நீ மட்டுமல்ல எத்தனையோபேர் என்னிடம் உதவிக்குவருகிறார்களே.'' அதே வேளையில் முன்னர் பணம் கொடுத்திருந்த கிழவனும் வந்து சேர்ந்தான். எனவே தந்திரக்காரனை வயோதிபன் எண்ணலானான்:

[illegible] ஐநூறு ரூபிள்களைத் தருவாள். எனவே இந்தக் கிழவனுக்கு நூறு ரூபிள்களைக் கொடுத்தாலும் மிகுதி நானூறு ரூபிள்கள் எனக்குத் தேறும்.,

இவ்வாறு யோசித்த வயோதிபக் கிழவனுக்கு ரூபிள்களைக் கொடுத்துவிட்டுச் சொன்னார்:-

''இதோ உன்னுடைய பணம்; என்னைப் போல நேர்மையையும் தன்னலமுமற்ற வேறொருவர் இவ்வுலகில்இருக்க முடியாதென்று தெரியும் தானே.'

கிழவன் தன் பணத்தைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

'நல்லதுமகளே,என்னை நம்பி வந்த முதலாவது ஆள் நீ மட்டுமல்ல என்று நேரிலேயே கண்டாய்தானே. சரி, இப்போது உன்னுடைய ஐநூறு ரூபிள்களைத் தா.'

அந்த நேரத்தில் அப்பெண் முன்னமே அறிவித்திருந்தற்கேற்ப அவளின் மகன் ஓடி வந்தான்.

'அப்பா வந்துவிட்டார். உங்களுக்காகக் காத்திருக்கிறார்' எனக் கூறினன் அவன்.

இதைக் கேட்ட அவள் உண்மையாகவே ஆனந்த மடைவதைபோல் குதூகல மடைந்து ஆடினாள். கிழவனும் தன் தந்திரம் வெளிப்படாமலிருப்பதற்காக தானும் சந்தோஷமடைவதாகக் காட்டிக் கொண்டான். அப்பெண் ஒரு இளமுறுவலுடன் கேட்டாள்;

''என் கணவர் வந்துவிட்டார் என்று நான் மகிழ்கிறேன். நீங்கள் ஏன் சந்தோஷப்படுகிறீர்கள்?''

''உனது தந்திரப் புத்திதான் என்னை ஆனந்திக்கச் செய்கிறது'' என்று வயோதிபன் கூறினன்.

அதற்கு அவள் இறுமாப்புடன் வயோதிபனை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்:

''இல்லை உனது தந்திரமும் அயோக்கியத்தனமும்தான் நம் இருவரையும் ஆடச்செய்திருக்கின்றன''

—'சோவியத்நாடு'

என் அபிமான —

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று அவரை தேயர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தேன். தியேட்டரில் அவர் ஒரு சிறிய சொற்பொழிவாற்றினார். இந்த வைபவம் முடிவடைந்தும் திரு, பேஜ் வீட்டில் சௌகார் ஜானகிக்காக நடைபெற்ற இரவு போஜன விருந்தில் கலந்துகொண்டோம். அச்சமயம் மேலும் மது அருந்தி என்னோடு முரணுக்கு வந்த நண்பர்கள் தங்கள் பிழையை உணர்ந்து என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். 'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்று இல்லாமல் அவர்கள் என்னோடு இன்னமும் நண்பர்களாகவே இருக்கிறார்கள். அதைப்போல் சௌகார் ஜானகியின் நட்பு வளர்ந்துள்ளது.

சிறுகதை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மெல்ல மெல்லப் பதுங்கி வயோதிபர் நிலையத்தைவிட்டு வெளியேறிவிட்டார். அலை மோதும் உள்ளத்துடன் நடந்து கொண்டிருந்த அவருக்கு இன்னமும் மகன் மீதுள்ள நம்பிக்கைத் துளிர் கருகிவிடவில்லை. வயோதிபர்மடத்தில் அநாதை போன்று கிடந்து உயிர்விடுவதை அவரால் நினைத்துக் கூடப் பார்க்கமுடியவில்லை. மகனுடைய வீட்டில் ஒரு மூலையில் பேசாமலேயே படுத்து விடவேண்டுமென்ற எண்ணதுடன் வேகமாகவே நடந்தவர் விடிவதற்குள் மகனுடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

விடிந்ததும் விடியாததுமாக சுந்தரேசனின் நீலப் படகுக் கார் செல்லையரையும் சுமந்து கொண்டு வயோதிபர் பராமரிப்பு நிலையத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தது.

''உன்னை வீட்டிலே பேசாமல் ஒரு மூலையில் கிடக்கிறன்றா'' கெஞ்சினார் செல்லையர்.

''ஐயா நாங்கள் நல்லாக இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கயில்லையா?'' திரும்பித் தகப்பனைப் பார்க்காமலே காரை ஓட்டிக்கொண்டிருந்தான் சுந்தரேசன்.

வழக்கமான படுக்கையில் வந்து படுத்துக்கொண்ட செல்லையர் மகன் காரில் பத்திரமாக வீடு போய்ச்சேரவேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். மகன் தந்தைக்காற்றும் உதவியை(?) செய்துமுடித்துவிட்டுச் சுந்தரேசன் சீதனக்காரில் வீட்டை நோக்கி விரைந்துகொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)

விளம்பரம்

கச்சாய் கிராமாட்சி மன்றம் அல்லாரை வெள்ளாம் போக்கட்டி ரோட் திருத்தவேலை.

1977ம் ஆண்டு மேமாதம் 20ம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிவரை கச்சாய் கிராமாட்சிமன்றத்தின் தலைவரால், மேற்சொல்லப் பட்ட வீதி வேலைக்கு ''சில்'' வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும்.

கேள்விப் பத்திரங்கள் 1977ம் ஆண்டு மேமாதம் 18ம் திகதி (புதன்கிழமை) பிற்பகல் 2.30 மணிவரை, கேள்விப் பிரேணப்பணம் ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் கட்டியதின் பேரில் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கச்சாய் கிராமாட்சிமன்ற அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் செயலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

(ஒப்பம்)
இ. செல்லையா
உப – அக்கிராசனர்
கச்சாய் கிராமாட்சிமன்ற அலுவலகம்,
கொடிகாமம்.
5. 5. 77

6106

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஏற்றுமதி கேள்விப்பத்திரம்

கேள்விப்பத்திரம் அனுமதித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பின் வரும் இடங்களில் இருந்து மேற்படி சங்கத்திற்கு பொருட்கள் ஏற்றுமதி செய்ய ரெண்டர் கோரப்படுகின்றது. லொறி வைத்திருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் விபரம் தேவைப்படின் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிப்பவர்கள் மேற்படி சங்கத்தால் வெளியிடப்பட்ட படிவத்தில் அனுப்பவேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

இடங்கள்:-
1. கொழும்பு
2. யாழ்ப்பாணம்
3. காங்கேசன்துறை
4. பருத்தித்துறை
5. நாவற்குழி
6. திருக்கோணமலை
7. பலாலி

பொதுமுகாமையாளர்.
2-05-77. 6107

சிப்பி கொள்வனவு

எமக்கு ஒரு கிழமைக்கு இரு லொறி லோட் வீதம் ஒரு வருடத்திற்கு தொடர்ந்து சிப்பி தருவதற்கு விலைவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி.

6114

லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநர் (Latheman) தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி.

6115

வரி விளம்பரம்

விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய்ரோட்டில், கச்சாய் கிராமசங்க அருகாமையால் போகும் வீதியில் 'செட்டியாவெளி' என்ற 32 பரப்பு மேட்டுநில மிளகாய் செய்கைக்குரிய காணி, கிணறு தொட்டிகள், 200 தென்னைகள், மா, வாழைகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளுங்கள்: மாரசிங்கா, உசன், மிருசுவில். 6112

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அண்மையில் சன்னதி வீதியில் முதலாவது வீடு ஐந்து பரப்பில் நவீன வசதிகளுடன் எட்டு அறைகள் கொண்டது. திருமதி பி. இராமலிங்கம், 145, சன்னதிவீதி, அச்சுவேலி. 6116

இயக்கச்சியில் நல்ல பராமரிப்பிலுள்ள 68 ஏக்கர் இளம் தென்னந்தோட்டம் தார் ரோட்டு அருகிலுள்ளது. 10 ஏக்கர் காய்க்கத்தொடங்கிவிட்டது. ஒலையால் வருஷம் ரூபா 1200/- வருமானம் உண்டு. புதுதாய்கல்லால் கட்டப்பட்ட வங்களாவும் உண்டு. காணி சீர்திருத்தும்கொமிஷனால் அனுமதிக்கப்பட்டது. (முழுதாயோ பிரித்தோ கொடுக்கக்கூடும்.) தபால்மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 5955, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 5955

''பருத்தித்துறை விஞ்ஞான முதலியார் வீதி, சின்னப்பிள்ளையார் கோவில் அருகாமையிலுள்ள 3½ நி. ப. விஸ்தாரமும், பங்கற்ற நல்ல தண்ணீர்க்கிணறுமுடைய காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும்: சு. குமாரசிங்கம், முத்துக்கிருஷ்ணர் ஒழுங்கை. சுன்னகம்.'' 6049

இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலும், புகையிரத நிலையம், கண்டி ரோட், தபாற் கந்தோர், சந்தை, ஆஸ்பத்திரி ஆகியவற்றிற்கு அண்மையிலும், வீடுகள் கட்டக்கூடிய 4 பரப்பு, 10 பரப்பு காணிகள் உண்டு. தொடர்பு; வ. சின்னையா, பிரசித்த நொத்தாரிசு, சாவகச்சேரி. 6090

தேவை

யாழ்.நகரில் 3 மைல் சுற்றுவட்டாரத்திற்குள் பலாலி வீதி, K.K.S. வீதி அல்லது கோண்டாவில் புகையிரத நிலயத்திற்கு அருகாமையில் 2 படுக்கை அறைகள் கொண்ட சகல வசதிகளுமுடைய வீடு ஒன்று விற்பனைக்கு தேவைப்படுகிறது. கடிதமூலம் உடனடியாக தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 6117 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 6117

குத்தகைக்கு

ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில் வியாபாரத்தலங்களுக்கு ஏற்ற நான்கு அறைகொண்ட வீடும், கடை கட்டுவதற்கான வெற்று நிலமும் குத்தகைக்கு உண்டு. கடிதமூலம்தொடர்புகொள்க. விளம்பர இல: 6099 C/o ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 6099

கல்வி

உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வித்தியா பகுதியினரால் அங்கிகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை) G. C. E. (A/L) H. N. C. E கலை, விஞ்ஞானம், வர்த்தகம், இரசாயனம், பௌதிகம், தாவரம், விலங்கியல் முதலியபாடங்களுக்கு செய்கைமுறைப் பயிற்சி (Practical) அளிக்கப்படும். G. S. Q. தூயகணிதம், பிரயோக கணிதம், புள்ளிவிபரஇயல், இரசாயனம், தாவரம், விலங்கியல் முதலிய பாடங்களுக்கு செய்கைமுறைப் பயிற்சியும் (Practical) அளிக்கப்படும். பதிவாளர் The College of Higher Studies ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6102

இலவசம்

''வேல்களிலே சிறந்த வேல்'' ''வேல்களிலே வெல்லும் வேல்'' கருத்தாழம் மிக்க சமய துண்டுப் பிரசுரம். தேவையானோர் எழுதுங்கள். இலவசமாக அனுப்பப்படும். த. இ. இன்பநாதன். சரசாலை, சாவகச்சேரி. 5984

WANTED

Wanted a Turner, Welder and Fitter with at least five years experience. Applications to be forwarded on or before 20th May, with two recent testimonials. Advt. No.6100, C/o Eela Naadu Ltd., Jaffna. 6100

FOR SALE

For immediate Sale. One Pye 3 Band Car Radio, One Car Stereo Cassete Player, One-two in one 3 Band Radio Cassete. Seelan Annappah, Near Market, Manipay. 6125

மணமகன் தேவை

யாழ்ப்பாண தமிழ் சைவவேளாள குலத்தைச் சேர்ந்த 34 வயதுள்ள வரும், லக்கினத்தில் செவ்வாய் உள்ளவருமான சங்கீத ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. நியாயமான சீதனம் வழங்கப்படும். விளம்பர இல: 6113, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6113

உற்சவம்

புங்குடுதீவு கிழக்கு வீராமலை ஸ்ரீமுருகமூர்த்தி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம்

காலம்: 8-5-77 ஞாயிற்றுக்கிழமை

பகல் சங்காபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும்.

மாலை 6-00 மணிமுதல் விசேட நாதஸ்வரக் கச்சேரிகளும், இன்னிசைக் கச்சேரியும், மெல்லிசைக் கச்சேரியும் நிகழும்.

விசேட நிகழ்ச்சியாக ஈழத்துத் திரையுலகில் புதுமை ஏற்படுத்திய கோமாளிகள் திரைப்படக்கலைஞர்களால் கோமாளிகள் கும்மாளம் நாடகம் இடம்பெறும்.

6118

சுமை தாங்கி

அந்த வயோதிபர் பராமரிப்பு நிலையத்தில் இருந்த அத்தனை ஜீவன்களும் பிரிவுணர்ச்சியில் தவித்தன. எதிர்ப்படுபவர்களின் முகத்தை ஏக்கத்துடன் நிமிர்ந்து பார்ப்பதும் தலையைக் குனிவதுமாக வயோதிபர்கள் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். வயோதிபர் நிலையத்தில் இத்தனை பரபரப்பையும் ஏற்படுத்திவிட்டு இரவு தப்பி ஓடிவிட்டார் செல்லையர். தங்கள் குடும்பத்திலேயே ஒருவனைப் பிரிந்து விட்டது போலல்லவா வயோதிபர்கள் துடித்துப்போய் இருக்கிறார்கள். வயோதிபர் நிலையத்துக்கு வந்துசேர்ந்தது தொடக்கம் செல்லையர் தன் அருமை பெருமைகளைப்பற்றிக் கூறாத நாட்களே கிடையாது. லண்டனுக்கு அனுப்பி தனது மகனைப் படிக்கவைத்ததைப் புராணபடனம் போலவே கூறுவார். மகளுடைய திருமணத்துக்காக தான் அலைந்து உலைந்ததைக் கூறும்போது கேட்பவர்களுக்கு உள்ளம் உருகத்தான் செய்யும்.

கூடத்திலிருந்த தூணில் சாய்ந்து நின்ற வார்டனின் கண்கள், முன்னால் புகைமண்டிக்கிடந்த பனிப்படலத்துக்கப்பால் மேய்ந்துகொண்டிருந்தன. அருகில் வந்த கந்தையா ''செல்லையர்.....'' என்று தொடங்கும் போதே குறுக்கிட்ட வார்டன் ''பொலிசுக்கு ரெலிபோன் பண்ணியாச்சு'' என்றார்.

''இல்லை ஐயா அவரெங்க போறவர் மகள் வீட்டைதான் போயிருப்பார்'' என்று கூறிவிட்டுக் கந்தையா திரும்பவும் உறுமிக்கொண்டு முன்னால் காரொன்று வந்துநிற்கவும் சரியாக இருந்தது.

ஓடிச்சென்று செல்லையர்...'' என்றபடி பின்சீற்றில் இருந்த செல்லையரின் கையைப் பிடித்துக் கொண்டார். செல்லையரை வார்டனிடம் ஒப்படைத்துவிட்டு அவர் லண்டனுக்கு அனுப்பிப்படிக்க வைத்த மகன் படகுக்காரில் பவனியைத் தொடர்ந்தான். செல்லையரைக் கண்டதும் எல்லோருக்கும் பழைய உற்சாகம் மீண்டு விட்டது.

எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் மனதுள் புதைத்துக் கொண்டு வாழும் அவர்கள் அந்தப் புது உலகத்தில் அதையெல்லாம் மறந்து விடும் முயற்சியில் காண்பதென்னவோ தோல்வியாகத்தான் இருந்தது.

'ஏன்செல்லையாமகள்வீட்டை போனனி. மகளட்டைப் போயிருக்கலாம்தானே''— ஆர்வத்துடன் கேட்டார் கந்தையா.

சீறிப்பாய்ந்தார்செல்லையர். ''என்ர மகள்தான் எண்டாலும்மகன் இருக்கேக்குள்ள ஆற்றையேன் உழைப்பிலை வாழுவனா'' என்று அவர் கூறியது கேட்டு கந்தையாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தனது நிலை மனக்கண்ணில் தோன்றியதால் சிரமத்துடன் அடக்கிக் கொண்டார்.

நகர்ந்து விட்ட நாட்கள், செல்லையரிடம் மீதியாக விருந்த சொற்பவலிமையையும் பறித்துக்கொண்டு விட படுக்கையில் விழுந்து விட்டார். கந்தையாதான் அருகிலிருந்து கவனித்துக்கொண்டார். செல்லையர் கேட்டுக் கொண்டபடி அவரது மகனுக்குத் தந்தி அடித்தார்கள்.

அன்றுமாலையே வந்துசேர்ந்து விட்ட மகனைக்கண்டதும் அவரது முகம் மலர்ந்து விட்டது. தூரத்தில் முகச்சுழிப்புடன் பார்த்துக் கொண்டு நின்ற செல்லையரின் மகனிடம் கந்தையா கூறினார். ''தம்பி... ஐயாவுக்கும் கடைசிக்காலம்: வீட்டை கொண்டுபோங்க''.

''அந்தக் கரைச்சலுக்காகத் தான் இங்கை கொண்டுவந்து விட்டனான்'' என்று அவன் கூறியது கேட்டபோது நெஞ்சத்தில் சம்மட்டிகொண்டு தாக்கியதுபோல் இருந்தது செல்லையருக்கு. பாவ ஆத்மாவை ஆண்டவன் பார்ப்பதுபோன்று அவனைப்பார்த்தவரின் கண்களின் முன்னால் பழைய நினைவுகள் படமாக விரிந்தன.

ஃ ஃ ஃ

சுந்தரேசன் லண்டனுக்குப் போய் மூன்றுவருடங்கள் கழிந்துவிட்டன. திண்ணையில் எதிராக அமர்ந்திருந்த தரகர் சுப்பிரமணியத்துடன் கதைத்துக் கொண்டிருந்த செல்லையர், ''அவன் வரும்

வரைக்கும் பொறுக்கேலாது மகளுக்கு ஒரு நல்ல இடத்தை பார்க்கவேணும்'' என்று கூறிய போது—

''நான்கெதியிலை ஒழுங்காக்கிறன்'' என்றுவிட்டு தரகர் எழுந்தார்.

''காணி உறுதியும் மகன் லண்டனுக்குப் போகேக்குள்ள ஈடுவைச்சாப்போல கிடக்கு'' என்று கூறிய செல்லையர் கூடவே தரகருடன் நடந்தார். கள்ளுத் தவறணை வரைக்கும் சென்றபின்னர்வழியனுப்பினால்தான் தனது மகளின் விஷயத்தில் தரகரின் கவனம் செல்லும் என்பது அவருக்குத்தெரியும்.

திறக்காத படலையெல்லாம் திறந்து ஏறாத படிகளெல்லாம் ஏறி ஒருவாறு சீதனப்பணத்தைச் சேர்த்துவிட்டார் செல்லையர். ஒரு வாழ்த்துத் தந்தியை அனுப்பி விட்டு அண்ணனுக்கான தனது கடமையை முடித்துக் கொண்டான் சுந்தரேசன்.

மகளுக்குத் திருமணம் முடித்து வைத்து ஆறுமாதம்கூட ஆகவில்லை. காலில் வாதம் வந்ததால் படுத்த படுக்கையாகிவிட்டார் செல்லையர். பாசத்துடிப்புடன் பராமரித்த மகளிலும் நாளாக,ஆக மாற்றம் தெரிந்தது. இரவு நெடுநேரமாகிவிட்டபின்பும் எண்ணைபூசிவிட மகள் வராததால்''பிள்ளை...''என்றுபலமாகவே அழைத்தார்.

''சாகவேண்டியவயசிலைஉள்ளதுகள்வீட்டிலைஇருந்தால்இப்படித்தான்'' மகள் வரவில்லை; மருமகன் சலிப்புடன் கூறியதுதான் கேட்டது.

''என்ரமகன் லண்டனாலை வந்தாப்பிறகுஎல்லாம் காட்டி வைக்கிறன்''என்றுகறுவியபடி அந்த நினைவிலேயே தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார் அந்தவைராக்கியத்தைப் பலமாகஅவர் மனதில் பதிய வைத்துவிட்டு வருடங்கள் இரண்டு கழிந்துவிட்டன.

லண்டனிலிருருந்து சுந்தரேசன் வந்துவிட்டான். தரகர் சுப்பிரமணியம் தானாகவே செல்லையரின் பின்னால் திரியத் தொடங்கிவிட்டார்.

''உன்ர ஆக்கினை பொறுக்க ஏலாமல்தான் சொல்லிறன். வீடுவளவும் காரோடலட்சரூபாயு மெண்டால் பேசு'' என்றார் செல்லையர். தலைகால்புரியாத மகிழ்ச்சியுடன் விடை பெற்றுக் கொண்ட தரகர் அடுத்த நாளே சாதகக் கட்டுடன் வந்து சேர்ந்துவிட்டார். கல்யாணச் செலவையும் பெண் வீட்டாரே ஏற்றுக்கொள்ள வெறும் மாப்பிள்ளையைமட்டும் காட்டிக் கல்யாணத்தை முடித்துவிட்ட செல்லையர் சீதன வீட்டில் மகனுடன் குடியேறியும்விட்டார்.

விடிந்ததும்ரவுணுக்குப்போப் விட்டு மத்தியானம் வீட்டுக்கு வந்தபோது செல்லையருக்குச் சரியான வெறி.

''சாகிற காலத்திலை ஒழுங்காக் கிடந்து சாகிறதுக்குக் குடியும் கூத்தும்...'' மருமகளின் எரிச்சல் கலந்த குரல்தான் அவரைவரவேற்றது.

''என்ர மகன்ர காசிலை நான் குடிச்சால் ஆருக்கும் என்னடி'' என்றார் செல்லையர். அன்று தொடங்கிய மனக் கசப்பைப் பெரிய பிரளயமாகவே ஆக்கிவிட்டாள். அவள் மருமகளைவெற்றிகாணச் செல்லையரால் முடியவில்லை. விளைவு-?

செல்லையர் 'டிமாண்ட்' பண்ணிச் சீதனமாக வாங்கிக் கொடுத்த அந்த நீலப் படகுக்கார் செல்லையரைச் சுமந்து கொண்டு வயோதிபர் பராமரிப்பு நிலையத்தை நோக்கி ஓடியது. செல்லையர் கெஞ்சினார். ஒரு மூலையிலேயே பேசாமல் கிடப்பதாகக் கூறினார்.

''அங்கை இருந்தால் உங்களுக்கு எல்லாம் வசதியாக இருக்கும்'' என்றான் சுந்தரேசன். உலகத்தில் தான் மட்டுமே தனித்து நிற்பதுபோல் ஒரு மனப்பிரமை தோன்றியது செல்லையருக்கு. சுந்தரேசன் விடை பெற்றுக்கொண்ட போது ஓடிச்சென்று கையைப் பிடித்துக்கொண்டார் செல்லையர். ''ஐயாவுக்கு ஏதுமென்றால் அறிவியுங்க'' என்று வார்டனிடம் கூறியபடியே தகப்பனின் கையை உதறி விடுவித்துக்கொண்டான். எந்தக் கைகள் அவனது படிப்புச் செலவுக்காகத் திறக்காத படலையெல்லாம் திறந்ததோ அதே கைகள் அநாதரவாகக் கிடந்தன.

முன்னால் முகம் சுழித்தபடி நின்ற சுந்தரேசன் ''ஐயா, நான் போறன்'' என்றபடி அவரது கைகளைப் பிடித்தான். உதறி விடுவித்துக்கொண்டவர் பழைய நினைவுகளிலிருந்து மீண்டார்.

சுந்தரேசன்போய்விட்டான். காரில் பத்திரமாக அவன் வீடு போய்ச் சேரவேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார் செல்லையர். ''நமக்கெண்டு எதையும் தேடி வைத்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது'' என்று கூறியபடியே அருகில் வந்தார் கந்தையா.

''காசு பணத்தைத் தேடுறதில்லையடா உண்மையான தேட்டம்...! மகனை லண்டனுக்கு அனுப்பிப் படிப்பிச்சு மனிசனாக்கினன். மகளை நல்ல இடத்திலை வாழவைச்சன். நம்மட பிள்ளையளுக்கு நல்லது செய்யிறதுதான்ரா உண்மையான தேட்டம்'' செல்லையர் நெஞ்சை நிமிர்த்திக் கூறியபோது,

'அந்தத்தேட்டந்தான் அநாதையாக உங்களை இங்கை கொண்டுவந்து விட்டிருக்குது'' என்றார் கந்தையா. செல்லையரால் தலைகுனியத்தான் முடிந்தது.

''தகப்பன் மகனுக்குச் செய்யவேண்டிய கடமையைத் தான்ரா செய்தன்'' என்றார் செல்லையர்.

''மகன் தகப்பனுக்குச் செய்யிற கடமை வயோதிபர் மடத்திலைசேர்த்துவிடுகிறதுதானா?'' என்று விரக்தியுடன்கேட்டுவிட்டுக்கந்தையர் தனது படுக்கைக்குச் சென்றுவிட்டார். தலையணையிலேயே முகம் புதைத்து விக்கிவிக்கி அழுதார் செல்லையர். தனது நிலையை நினைத்துப் பார்த்த அவருக்கு நெஞ்சமே தணலாக எரிந்தது.

கல்லான பிள்ளைகளின் மனதைப்போல இருளும் மெல்லப் பரவத் தொடங்கிப் பல மணி நேரமாகிவிட்டது. கட்டிலில் இருந்து எழுந்த செல்லையர்

(2-ம் பக்கம் பார்க்க)

சுமையாகியபோது...!

காவலூர்
எஸ். ஜெகநாதன்

உருவகக்கதை

நாணயம்!

கலகலவென்ற சிரிப்பொலி கேட்டுத் துணுக்குற்றது ஒரு புதிய நாணயம்.

''ஏன் நண்பர்களே என்னைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள்...?''

—அது பணிவோடு குழைந்தது.

''ஓ...அதுவா - ? இனி நாணயம் என்ற பெயர் உனக்கு இல்லாமற் போகப்போகிறதேயென்று நினைத்தோம். சிரிப்பு வந்தது.'' மற்ற நாணங்கள் ஏகோபித்த குரலில் விடை கொடுத்தன.

''அதெப்படி...? இந்த உருவம் உள்ளவரை என் பெயர் அப்படித்தான் வழங்கும்'' என்றது, செப்பினாலான அந்தப் புதிய நாணயம்.

''பெயர் வழங்குவதென்னவோ உண்மைதான். ஆனால் அந்தப் பெயருக்குரிய பண்பு வழங்காதே...'' - மீண்டும் ஏகோபித்த குரலில் மற்றவை கலகலத்தன.

ஒன்றும் புரியாமல் விழித்தது புதிய நாணயம்!

''நண்பனே, அதோ பார்! எங்கள் சகோதரன் ஒருவன் கிடக்கிற கோலத்தை.''

-புதிய நாணயம் மிரட்சியுடன் பார்த்தது.

அங்கே—

செல்லாக் காசொன்று அனாதரவாக ஒரு குப்பைமேட்டின் மேல் கிடந்தது.

புதிய நாணயம் பேந்தப் பேந்த விழித்தது.

அதனைப் பரிதாபத்துடன் பார்த்தவாறே ஒரு நாணயம் சொன்னது—

''நண்பனே, இந்த மனிதர்களே இப்படித்தான். தமக்கு உதவுகிறவரை தலையில் தூக்கி

கண. மகேஸ்வரன்

வைத்துக் கொண்டாடுவார்கள் தமது தேவை முடிந்துவிட்டால் சீட்டைக் கிழித்து வெளியே விடுவார்கள். அதோ அந்தச் சகோதரன் பெறுமதி உள்ளவரை பத்திரமாகப் பேணப்பட்டான். இப்போ செல்லாக் காசாக ஒதுங்கிக் கிடக்கிறான். நாணயமில்லாத மனிதனிடம்மாட்டிக்கொண்டு மானமிழந்து சீவிப்பதைவிட, செல்லாக்காசாக மாறிச் சுதந்திரமாக இருக்கலாம்போல் தோன்றுகிறது.''

மனவருத்தத்துடன் கூறிப் பெருமூச்சு விட்டது, பழைய நாணயம்.

''ஆமாம்; நாணயம் என்ற பெயருடன் நாணயமற்றிருப்பதைவிட அந்த வாழ்க்கை நல்லதுதான். ஆனால் என்ன செய்வது...? எங்கள் தலைவிதி பெறுமதியுடனல்லாவா இருக்கிறோம்.''

—புதிய நாணயமும் ஒரு பாட்டம் அழுது தீர்த்தது.

'படீ' ரென்று கதவு தள்ளப்படும் ஓசை கேட்டு அமைதியாயின நாணயங்கள்.

உள்ளே வந்தவன் அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துப் பொறுக்கி எடுத்து 'பொக்கட்'டினுள் போட்டுக் கொண்டு நடந்தான்.

அந்த நாணயங்கள்—

தமது தலைவிதியை எண்ணிப் பெருமூச்சு விட்டன!

AVRA
ஓரியண்டல் பாம்

நான் சந்தித்த அரசியல் தலைவர்கள்

தேடிவந்த பதவிகளையும் உதறித்தள்ளியவர் தந்தை செல்வா!

அமரர் திருச்செல்வத்தின் அஸ்தி கீரிமலை கடலில் அவரது புதல்வல்களால் கரைக்கப்பட்டது. நேரமோ 5 மணியைத் தாண்டிவிட்டது. நான் அவசரமாக ஈழநாடு காரியாலயம் செல்லவேண்டும். நான் வந்த காருக்கு ஓடிவந்தேன். பின் ஆசனத்தில் பெரியார் செல்வா இருந்தார். நான் சாரதி சீட்பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். பெரியவர் அருகில் வருமாறு அழைத்தார். மெதுவாக ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டும் என்றார். எனக்கு உடலெல்லாம்மின்சாரம்பாய்ச்சியது போல் இருந்தது. சற்றுத்தூரநின்ற சட்டத்தரணி யோகேஸ்வரனிடம் சொன்னேன். அவர் ஓடோடி வந்து பெரியவரிடம் கதைத்தார். இளைஞர்பேரவை லோகேஸ்வரனும் அருகில் நின்றார்.

அன்று காலையில் வீட்டில் பெரியவர் தவறி விழுந்திருக்கிறார். நாரியில் உரசல் காயம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவர் அது பற்றி எவரிடமும் கூறவில்லை. திருச்செல்வத்தின் அஸ்தி கரைக்கும் வரை அவர் வலியை தாங்கிக் கொண்டிருந்திருக்கிறார். உடனடியாக ஆஸ்பத்திரி சென்றிருந்தால் 'திரு'வின் அஸ்திகரைப்பு வைபவத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டுவிடும் என்பது அவர்எண்ணம் போலும்.

தாமதமின்றி கார் புறப்பட்டது. பெரியவர் பின் ஆசனத்தில் இருந்தார். நான் முன் ஆசனத்தில் ஏறிக்கொண்டேன். நேரம் 6 மணியைத் தாண்டிவிட்டது. தெல்லிப்பளையில் தாமதித்தால் உரிய நேரத்திற்கு செய்தி கொடுக்க முடியாது. இது பற்றி சட்டத்தரணி அருணாசலத்துடன் ஆலோசித்தபடி சென்றேன்.

முதுகில் சுரண்டினார்

தெல்லிப்பளையில் என்னை இறக்கிவிடும்படியும், நான் அங்கிருந்து பஸ்ஸில் செல்வதாகவும் கூறினேன். எங்கள் பேச்சுக்களை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பெரியவர் என் முதுகில்சுரண்டினார். திரும்பிப் பார்த்தேன். 'தெல்லிப்பளையில் என்னை இறக்கி விடுங்கள். நான் வேறு கார் பிடித்து ஆஸ்பத்திரிக்குபோகிறேன்' என்றார். நான் அதிர்ச்சியடைந்துவிட்டேன். 'எனக்கு அவசரமில்லை நானும் ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டு போகிறேன்' என்றேன். சிறிது நேரத்தால்பின்னால் கோப்பாய் எம். பி. காரில் வந்துகொண்டிருந்தார். முன் ஆசனத்தில் திருச்செல்வத்தின் புதல்வர் மட்டும் இருந்தார். நான் இறங்கி கோப்பாய் எம். பி. யின் காரில் ஏறி காரியாலயம் சென்றேன். மற்றவர்களுக்கு சிரமம் கொடுக்க விரும்பாத ஒரு தனிப்பிறவி அவர்.

தந்தையின்நிலையை நினைத்த போது, அவரைப்போன்ற தலைவர் ஒருவர் தமிழினத்திற்கு கிடைப்பது அரிதிலும் அரிது என எண்ணிக் கொண்டேன். நம் தலைவர்களில் பலர், மலிவான விலையில், கார் வாங்க பவனிவரும் நேரத்தில், தந்தை செல்வா, வாய்ப்பிருந்தும், வசதியிருந்தும் சொந்தத்தில் ஒரு கார் வைத்திருக்கவில்லை. பஸ்ஸிலும் வாடகைக்காரிலும், தமது பயணத்தைமேற்கொண்டு மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார்.

சிங்கள ஸ்ரீயை எதிர்த்து சிறை சென்ற தந்தை செல்வா சிங்களஸ்ரீ காரை கடைசிவரை சொந்தமாகவைத்துக்கொள்ள விரும்பவில்லை என்பதை அறிந்துகொண்டேன். காலத்திற்கு ஒரு கோலம், நேரத்திற்கு ஒரு கொள்கையாக அவர் வாழ்ந்ததில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி

1956ம் ஆண்டு தேர்தல் முடிந்த பின்னர் எதிர்க்கட்சி தலைவர் யார் என்ற கேள்வி எழுந்தது. வவனியா எம். பி. திரு. சுந்தரலிங்கம், தமிழர் ஒருவரே எதிர்க்கட்சி தலைவராக வரவேண்டும் என விரும்பினார். அத்தேர்தலில்தமிழரசுக்கட்சி பெரும்பான்மை இடத்தைப்பிடித்த மூன்றாவது கட்சியாக விளங்கியது. சமசமாஜக் கட்சி இரண்டாவது கட்சியாக விளங்கியது. தந்தை செல்வ நாயகத்தையே எதிர்க்கட்சி தலைவராக்கவேண்டுமென சுந்தரர் விரும்பினார். தமிழர் ஒருவர் எதிர்க்கட்சிதலைவரானால் உலக அரங்கில், தமிழினத்திற்காக பலவற்றை சாதிக்கலாம் என்பது சுந்தரர் கருதது. யாழ்ப்பாணத் தொகுதியில் தெரிவுசெய்யப்பட்ட திரு. ஜி. ஜி. பொன்னம்பலததுடனும் சுந்தரர் இது பற்றி ஆலோசித்தார். மூதறிஞர் செல்வாவை எதிர்க்கட்சி தலைவராக்க, ஜி. ஜி. யும் ஆதரவளிப்பதாகக் கூறிவிட்டார். மற்றும் சில முஸ்லிம் எம். பிக்களின் ஆதரவையும் சுந்தரர் பெற்றுவிட்டார்.

சமசமாஜக் கட்சியினருக்கு உள்ளதைவிட மூதறிஞர்செல்வாவுக்கு 1 வாக்குக் கூடஇருந்தது. சுந்தரர் இது பற்றி தந்தை செல்வாவைக் கேட்டபோது 'செல்வா முதலில் மறுத்துவிட்டார். பின் வீட்டிற்கு சென்று ஆலோசித்தபின் நீங்கள்பொறுப்பேற்றால் எனக்குச்சம்மதம்' என்று மூதறிஞர் செல்வா சுந்தரருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

மறுநாள் எதிர்க்கட்சி தலைவர்கள் தெரிவு நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனால் ஜி. ஜி. பொன்னம்பலம், அன்று தெரிவுநடைபெறாது என்பதால், முக்கிய வழக்கொன்றில் ஆஜராகக் கோர்ட்டிற்குச் சென்றுவிட்டார். இந்த நிலைமையில் அன்றே எதிர்க்கட்சித்தலைவர் தெரிவை நடத்தினால் சமசமாஜக்கட்சி வெற்றிபெறும் வாய்ப்பு ஏற்பட்டது மூதறிஞர் செல்வா கோஷ்டியில் மற்றும் இருவர் வந்திருக்கவில்லை. திடீரென எதிர்க்கட்சி தலைவர் தெரிவை அன்றே நடத்துவது பற்றி சமசமாஜக்கட்சித தலைவர்கள் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். சபாநாயகர் மூதறிஞர் செல்வாவைப் பார்தது 'தலைவர் தெரிவை எப்போநடத்தலாம்' என்றுகேட்டபோது மூதறிஞர் 'இன்று நடத்தலாம்' எனக் கூறிவிட்டார். இதனால்தந்தை செல்வா எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பைஇழக்கநேரிட்டது. டாக்டர் என். எம். எதிர்க்கட்சித் தலைவரானார். தந்தை செல்வா தம் வாழ்நாளில் என்றுமே பதவிக்கு அடிமையாகவில்லை. பதவி ஆசை அற்றவராகவே வாழ்ந்தார். இச்சம்பவத்தை சுந்தரரே எனக்கு கூறி குறைபட்டுக்கொண்டார்.

பதவிகள் பலமுறை அவரை நாடி வந்தபோதும், அவர் அதற்கு அடிமையாகவில்லை. தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது கூட, பிரதமர் டட்லி செனநாயக்கா தமிழரசுக்கட்சியினருக்கு 3 மந்திரிப் பதவிகளைக் கொடுக்க முன்வந்தார். தந்தை செல்வாவிரும்பியிருந்தால் முக்கிய மந்திரிப் பதவி எதையாவது பெற்றிருக்கலாம்.

அண்மையில் கூட, அரசில் உள்ள சில அமைச்சர்கள், ஆட்சியை 3 வருடம் நீடிப்பதற்காக கூட்டணியினரின் ஒதது ழைப்பை நாடியதாகவும், மூதறிஞர் செல்வா விரும்பியிருந்தால், அரசுக்கு ஆதரவளித்து 3 வருடங்கள் முக்கியமந்திரிப் பதவி ஒன்றை பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் அவர் என்றுமேபதவிக் கடிமையாகியது கிடையாது. பதவிஆசையில்லாது தந்தை செல்வா கட்டிக்காதது வளர்த்துவந்த கூட்டணிக்குள்சில சில கருத்துவேறுபாடுகள், தலை தூக்கியுள்ளநேரத்தில், தலைவர்கள், மூதறிஞர் செல்வா எப்படி பதவிக்கு அடிமையாகாமல் வாழ்ந்தாரோ அந்த வழியைப் பின்பற்றினால்தான் தமிழினத்திற்கு விமோசனம் பெற்றுக் கொடுக்க முடியுமென்ற உண்மையை இனியாவது ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே தமிழினத்தின் ஆவல். மூதறிஞர் செல்வாவின் வாழ்நாளில் ஏற்பட்டஒவ்வொருசாதாரண நிகழ்ச்சியும் தமிழினத்திற்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டது.

கா. யோகநாதன்
(ஈழநாடு பிரதம நிருபர்)

1965ம் ஆண்டு தேர்தல் சமயம் அது. மீசாலை புதிய சந்தை மைதானத்தில் தமிழ் காங்கிரஸ் கூட்டமொன்று நடந்துகொண்டிருந்தது. அக்கூட்டத்திற்கு தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலமும் வந்திருந்தார். வேறு ஒரு கூட்டத்திற்கு செல்லுவதற்காக கூட்டததில் நடுவில் ஜி.ஜி. பேசிக்கொண்டிருந்தார். நான் வீதிக்கு அருகில் நின்றுகொண்டு அவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தேன். கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் யாவரும், ஜி.ஜி. யின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது இரவு 8 மணி இருக்கும். என்னைக்கடந்து ஒருகார் ஒன்று சென்றது. அக்காரின் பின் சீட்டில் ஒரு மெலிந்த உருவத்தை வெளிச்சத்தில், கண்டேன். அது மூதறிஞராகத்தான் இருக்கவேண்டும் என ஊகித்துக்கொண்டு கார் சென்ற பக்கத்தை திரும்பிப் பார்ததேன். கொஞ்சத் தூரம் சென்றதும், கார் மெதுவாக நின்றது. நான் அந்த உருவம் யாராக இருக்கும் என்ற ஆவலில், காரைநோக்கி சென்றேன். பின் சீட்டை உற்று நோக்கினேன். மூதறிஞர் சாய்ந்தபடி அமர்ந்திருந்தார், ஜி.ஜி.யின் பேச்சு ஒலிபெருக்கியில் கேட்டுக்கொண்டிருந்தது. நான் சாரதியிடம்மெதுவாக பேச்சுக்கொடுத்தேன். கிளிநொச்சி தொகுதியில் பண்டிதரை ஆதரித்து ஒரு கூட்டம் நடப்பதாகவும், அதற்கு செல்வதாகவும் கூறினார். நான் செல்லும்போது ஒருவர் இறங்கி சென்று கொண்டிருந்ததையும் அவதானித்தேன். சுமார் 10 நிமிடங்கள் கார் அவ்விடததில் நின்றது. நான் பெரியவருடன் எதுவும் பேசவில்லை. அவரும் என்னுடன் எதுவும் பேசவில்லை. காரிலிருந்து சென்றவர் வந்து ஏறிக்கொண்டார். அவர் எனக்கு தெரியாத புதியவராக இருந்தார். கார் புறப்பட்டு சென்றது சாரதியிடம் நான் யார் என்பதை காட்டிக்கொள்ளவில்லை.

யாழ். முற்றவெளி மைதானத்தில் ஹர்த்தால் ஞாபகார்த்த கூட்டமொன்று நடந்துகொண்டிருந்தது. சரியான குளிரும், பனியுமாக இருந்தது. மழைபோல பனிப்பெய்துகொண்டிருந்தது. கூட்டத்தில் வந்தவர்களில் பலர் காதை மூடி மௌவ்ளராலும் துவாயாலும், தலையைச் சுற்றிக் கொண்டிருந்தனர். எனக்கோ ஒரே நடுக்கமாக இருந்தது. இன்னும் கூட்டம் ஆரம்பமாகவில்லை. மேடைக்கு அருகில் சென்றேன். ஒரு கதிரை மட்டும் இருந்தது. அதில் பெரியவர் இருந்தார். சேட்டும் வேட்டியும் அணிந்திருந்தார். தலையைமூடி அவர் எதுவும் கட்டவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இந்த வயதுபோன காலத்தில், இந்தக் கடும் குளிரையும், பனியையும் தாங்கிக்கொண்டு சாதாரணமாக உட்காந்திருந்தார். அவரையே உற்றுப் பார்த்தேன். பனியும் குளிரும் அவரை நெருங்க அஞ்சியிருக்க வேண்டும். இளம் வாலிபர்கள்கூட தோள்களில் கைகளை இறுக்கியபடி, நடுங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் பெரியவரோ சர்வசாதாரணமாக நடுக்கமோ, உதறலோ எதுவுமின்றி இருந்தார். எல்லாவற்றையும் வென்ற பெரும் மனிதராகவே எனக்குதோற்றமளித்தார். அன்று கூட்டம் முடிய இரவு 10 மணியாகி விட்டது. அதுவரை அவர் மேடையிலேயே இருந்தார். தமிழினத்திற்காக, இதுமட்டுமல்ல, எத்தனையோ தியாகங்களை பெரியவர் செய்தார். அவர் செய்த தியாகம், தமிழினம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

அடுத்த வாரம் வவனியா முன்னாள் எம்.பி. திரு. சி. சுந்தரலிங்கம் கட்டுரைவெளி வரும்.

செந்தமிழ்ப் படை ஒன்று செய்தவன்!

எந்தையர் பலர் வாழ்ந்த கோட்டையில்
ஈழ நாடெனும் பூமியில்
மந்தையின் நிலை கொண்டு பைந்தமிழ்
மக்கள் வாடிய வேளையில்
செந்தமிழ்ப் படை ஒன்று செய்தவன்
செல்வநாயகன் வருகவே!
வெந்தழல் தனில் எம்மைவாட்டிடும்
வீணர் வல்லமை வீழ்கவே!

குன்று போலிரு தோள்களோ டிசை
கொண்டு நான்கு திசைகளும்
வென்று செந்தமிழ் ஈழ நாட்டினில்
வீரமாடிய மன்னர்கள்
சென்ற பாதையில் இன்று வந்தவன்
செல்வநாயகன் வருகவே!

தெங்கு சூழ்ந்திருமட்டு மாநகர்
செல்வ யாழ்.நகர் திருமலை
எங்கும் ஓடி அலைந்து செந்தமிழ்
இனமெல்லாம் ஒன்று கூடியே
பொங்கு சுதந்திர ஈழநாட்டினை
புதுக்கும் எந்தை நீ வாழ்கவே!
சிங்களத் தோடு சமதை யானதோர்
தேசம் கண்டு நீ வெல்கவே!

எங்கு வாழினும் தமிழர் யாவரும்
இதய உயர்வினால் ஒருவரே!
பங்கம் ஒருவர்க்கு நேரின் நாமிந்தப்
பாரையும் பொடியாக்கு வோம்!
எங்கும் பொருள் சாதி சமய வேற்றுமை
எம்மை அண்டாது ஓட்டுவோம்
சங்கு கொண்டு ஊதுவோம்! இதைத்
தரணிக் கெலாம் எடுத் தோது வோம்!

(1972-ம் ஆண்டு தந்தை செல்வநாயகம் அவர்கள் தமிழ்நாடு சென்றிருந்த போது 'சென்னை மாவட்ட நாம் தமிழர்' இயக்கத்தினர் கோகலே மண்டபத்தில் வரவேற்பளித்துக் கௌரவித்தனர். அச்சமயம் அவர்கள் வாசித்தளித்த வரவேற்பிதழில் மேற்கண்ட கவிதை இடம்பெற்றுள்ளது.

அதன் முன்னுரையில் 'இலங்கைக் காந்தி, ஈழத்து முஜீப், தமிழர் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கட்கு சென்னை கோகிலே மண்டபத்தில் 24-2-72 அன்று நடந்த மாபெரும் வரவேற்பின் போது படித்தளித்த வீரவரவேற்பிதழ்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உதவியவர்; க. வாமதேவன், சுழிபுரம்.)

யாழ் பூங்காவில் பயங்கரக் கரடி!

—வாணம்—

ஆச்சரியம்! தப்பிச்
டிக்கு இப்படி
த் திருப்பிச் சொல்
ல் இருக்கவுமில்லே
அப்படிக் கற்றுக்
ல்லியே. அப்படி
ர்கள் சொன்னதை
டி என்னவென்று
றுகின்றது?
விசில் அடித்தால்
சில் அடிக்கிறது!
உரத்துக்கத்தினால்
ரத்துக்கத்துகிறது!
பேசினால் அதுவும்
பேசுகிறது!
ல் இது கரடியாகத்
குமா?என்ற சந்தே
விட்டது! எனவே
ழியர்களில் ஒரு
க்குள் ஒளித்துக்
ப்பவன் யாரடா,
ரப்போறியா இல்
'' என்று கத்தி

ளிருந்து அதே
''புதருக்குள் ஒளித்
ருப்பவன் யாரடா
வரப்போகிறயா,
டவா!'' என்று
து.
காரர்கள் இருவ
ர ஒருவர் பார்த்
டனர்.
நேரம் மௌனம்.
ருவரும் 'சடார்'
தருக்குள் பாய்ந்து
உருவத்தை அமுக்
வெளியே இருந்து

டியுமில்லை-கத்தரிக்
. யாழ்.நகர வீதிக
த்திரியும் ஒரு பைத்

பத்தியத்தைப்
இத்தனை ஆயத்தங்
ய்தார்கள்!

பொலிஸ் அதிகாரிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை.

எவ்வளவு, நேரம், காலம், சக்தியெல்லாம் வீணாகிவிட்டது!

பூங்காவில் கரடியொன்று பதுங்கியிருப்பதாகத் தகவல் கொடுத்தவர் யார் என்று ஒருகணம் எண்ணிப்பார்த்தார் அதிகாரி! அது யார் என்பதே மறந்து போய்விட்டது. இது யாரோ வேண்டுமென்றே புரளிவிட்டிருக்கிறார்கள் என்று அவர் எண்ணலானார்.

சர்க்கஸ் கம்பனி மனேஜருக்கு இதைவிட ஆத்திரம் மேலிட்டது.

பூங்காவில் கரடி பதுங்கியிருப்பதாக பொலிஸ் அதிகாரி தானே சர்க்கஸ் மனேஜருக்குத் தகவல் கொடுத்தவர்: பொலிஸ் அதிகாரி இவ்வளவு கெட்டிக்காரராய் இருப்பார் என்று அவர் எண்ணவில்லை.

இதேசமயம் சர்க்கஸ் கம்பனி ஊழியர்களால் வெளியில் இழுத்துவரப்பட்ட 'பைத்தியம்'; 'என்னை விடுங்கோ' என்னை விடுங்கோ' என்று கத்தியது:

கரடியைக் காணுத கோபத்தில் சர்க்கஸ்காரர்கள் பைத்தியத்தின் காதைப்போட்டு முறுக்கினர்கள்.

'அடே மடையர்களா, முட்டாள்களா, பேயன்களா, விசர்ப்பயல்களா! பைத்தியக்காரர்களா! என்னை விடுங்கோடா' என்று பைத்தியம் குளறியது,

கரடியைப் பார்க்க வந்த பொதுசனங்கள் பைத்தியம் வெளிப்பட்டதைக்கண்டு ஒரே சிரிப்பாக சிரித்தனர்!

இந்தப் பைத்தியத்தைப்

(2-ம் பக்கம் பார்க்க)

கலையுலகத் தொடர்புகள்-21

என் அபிமான நடிகை

சௌகார் ஜானகி

எஸ். பி. மயில்வாகனன்

சௌகார் ஜானகி நடித்த படங்கள் என்னுல் என்னுல் பார்க்காமல் இருக்க முடியாது. சில சமயம் பல முறைப்பார்த்து அவர் நடிப்பை ரசித்திருக்கிறேன். என் அபிமான நடிகையான சௌகார் ஜானகியை சந்திக்க விரும்பி பலமுறை ஸ்ருடியோக்களில் தேடியிருக்கிறேன். ஆனால் பலமுறைக்குப் பின் ஒருமுறை இந்தியா விஜயம்செய்தபொழுது அசோகனுடு ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அசோகன் என்னை அவருக்கு அறிமுகம்செய்து வைத்தார். அந்தச் சமயம் என் மனைவியும் என்னுடு வந்திருந்தார். அவளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டாள். அதன்பின் என்மனைவியும் சௌகாரும் நெருங்கிய சினேகிதர் ஆகிவிட்டார்கள். என் மனைவியும் என்னைப்போல் சௌகாரின் நடிப்பை ரசிப்பவள் அதனால் அவர்கள் சினேகம் வளர்ந்ததில் ஆச்சரியமில்லை.

பிறிதொரு சமயம் நான் சென்னை சென்றிருந்தபொழுது சௌகாரை வாஹினி ஸ்ருடியோவில் சந்தித்தேன். அந்தச் சமயம் என்னை நிச்சயம் வீட்டிற்கு வந்து இரவு உணவு அருந்தும்படி கேட்டுக்கொண்டார். நான் சம்மதித்து அவர் வீட்டிற்கு போயிருந்தேன் புதிதாக கட்டப்பட்டிருந்த வீடு பலவித சௌகரியங்களும் கொண்டது. ஒரு பின்னணிப் பாடகர் வீட்டிற்கு அருகாமையிலிருந்தவீடு.அந்தவீட்டில்ஒரு பகுதி பெரும்ஹோட்டல்களில் மது விற்பனைக்காக அமைக்கப்பட்டுள்ள பகுதி மாதிரி ஒரு சிறியபகுதி அமைக்கப்பட்டிருந்தது. அதில் பலவித மதுபானங்களும் இருந்தன. அங்கு அச்சமயம் இருந்த ஒரு ஹைத்தராபாத் நகர பிரபல வியாபாரி ஒருவருக்கு அறிமுகம் செய்துவைத்து இருவரும் விரும்பிய மதுபானத்தை தெரிவு செய்து அருந்திக் கொண்டிருங்கள் நான் இதோ சில வினுடியில் வெளிக்கிளம்ப தயாராகி வந்துவிடுகிறேன் என்று தன் அறைக்குள் போய் விட்டார். நானும் சௌகாரின் நண்பரும் விஸ்கி அருந்திக்கொண்டிருக்கும் பொழுது முன்னையை விட இன்னமும் பலமடங்கு குறைந்தவராக தோற்றமளிக்க வெளிவந்தார்சௌகார். "What are you both drinking, get me alao a drink" என்று ஆங்கிலத்தில் கூறிக்கொண்டு வந்து எங்களுக்கு முன் உட்கார்ந்தார். சௌகாரின் நண்பர் அவருக்கும் ஒரு விஸ்கி ஊற்றிக்கொடுத்தார். அவரின் விஸ்கி முடிந்தும் சௌகார் எழுந்து மூவருக்கும் மீண்டும் ஒரு றவுண்ட் விஸ்கிஊற்றினார் இந்தவிஸ்கி காரம் கூடியதாக இருந்தது. நான் சைகைகாட்டி குறைக்க சொன்னேன். பயப்படாதிங்க காரில் போகும் பொழுது அருந்துவதற்காகத்தான் கொஞ்சம் கூடுதலாக ஊற்றினேன். நாங்கள் சாப்பிட ஒருபெரிய ஹோட்டலுக்கு போகிறோம் எங்கள் வீட்டிலிருந்து ஹோட்டலுக்கு போவதற்குள் இது முடிந்து விடும் என்றார். அதோடு நாங்கள் இரவு உணவு அருந்தப் போகும் ஹோட்டலில் மது பானம் இல்லை. இதையெல்லாம் உத்தேசித்தே சௌகார் கார் பயணத்திற்கு சற்று கூடுதலாகவே ஊற்றிக்கொண்டு வந்துவிட்டார்.

ஹோட்டலில் சாப்பிட்டோம்

நாங்கள் ஹோட்டலுக்கு போகமுன் சௌகாரின் நண்பர் ஹோட்டலுக்கு டெலிபோன் செய்து மூவருக்கான மேசை பதிவுசெய்து விட்டார். ஆகையால் நாங்கள் போய் இறங்கியதும் நேராக அந்த மேஜையில்போய் அமர்ந்து கொண்டோம். அந்த மேஜைக்கு போகும்பொழுது அங்கு ஏற்கனவே உணவருந்த வந்திருந்தவர்கள் சௌகாரை அடையாளம் கண்டுகொண்டு எழுந்துநின்று பார்த்தார்கள். சிலர் அவர் மேஜையில் அமர்ந்ததும் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தார்கள். அங்கு இசைத்துக்கொண்டிருந்த இசைக் குழுவினர் சௌகாருக்குப் பிடித்தமான ஒரு பாடலை இசைக்க ஆரம்பித்தார்கள். இச்சமயத்தில் சௌகாரின் ஆங்கிலத்திறனை குறிப்பிடவேண்டும். கொன்வென்ரில் படித்தவர் அதனால் ஆங்கிலம் சரளமாகவே பேசுவார். நாங்கள் ஹோட்டலுக்கு போன நேரம்முதல் ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டிருந்தோம் ஆனால் அவரது நண்பர் ஆங்கிலத்தில் சரளமாக பேசமாட்டார். ஆகையால் அவருடன் தன் தாய்மொழியான தெலுங்கில் பேசினர். ஹோட்டலில் பரிமாறுவோரை ஆங்கிலத்தில் அழைத்து உணவு பட்டியலைக் கொண்டுவரச்செய்து எங்களுக்குத் தேவையான உணவுக்கு ஆடர் கொடுத்தார். சில நிமிட நேரத்தில் சூப கொண்டுவந்து வைத்துவிட்டு போனர் பரிமாறுபவர். சூப்பை எடுத்து வாயில்வைத்தவர் சூப் ஆறியிருப்பதை அறிந்து Bearer என்று சத்தம் போட்டார் சௌகார். அவன் ஓடோடியும் வந்து நின்றான். I don't want this soup, take it away'' என்று கத்தினர். பிழை செய்தவனுக்கு காரணம் புரிந்து விட்டது உடனே அதை எடுத்துக்கொண்டு போய் வேறு சுடச்சுட சூப் கொண்டுவைத்து வைத்தான்.

அதன்பின் எங்களுக்கு ஆடர் கொடுக்கப்பட்ட உணவை சாப்பிட்டுவிட்டு, விடுதிரும்பும் பொழுது சௌகாரின் நண்பர் தன்கார் ஒட்டும் திறனைக் காட்டுவதற்காக மெதினுப்பி வழியாக காரை விசையாக ஓட்டிச்சென்றார். தங்கள் வீட்டிற்குப் போகும் வழியில் என்னையும் நான் தங்கியிருக்கும் விடுதியில் இறக்கிவிட்டு சென்றார்கள். இதன்பின் நான் சௌகார் ஜானகியை ஒரு விழாவில் கலந்து கொள்வதற்காகவும் எதிர்நீச்சல் படம் காண்பிக்கும் தியேட்டரில் ரசிகர்கள் முன் தோன்றுவதற்காகவும் இலங்கைக்கு வந்த பொழுது அவரை சந்திக்கும் சந்தர்ப்பம் மீண்டும் கிடைத்தது. இலங்கைக்கு வரமுன் எனக்கு அறிவித்து வந்தார். அதனால் அவரைகட்டுநாயக்கா விமான நிலையத்தில் சந்தித்தேன் விமான நிலையத்திலிருந்து நேராக அவர் தங்குவதற்கு ஒழுங்கு செய்திருந்த ஹோட்டலுக்கு தனது ஹைதராபாத் நண்பரோடு தனது இரண்டாவது மகளோடும் போய்விட்டார். நானும் என்மனைவியும் வீட்டிற்கு வந்துவிட்டோம். இரவு சுமார் 9 மணியளவில் எனக்கு சௌகாரிடமிருந்து எனது வீட்டிற்கு டெலிபோன் வந்தது. டெலிபோனில் பேசிய சௌகார் என்னை உடனே தான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு வரும்படி வேண்டிக்கொண்டார். உடனே நானும் எனது மனைவியும் அவர் கோட்டையில் தங்கியிருந்த அவருடைய ஹோட்டலுக்குச் சென்றோம் அவர் எங்களைத் தனது அறைக்கு அழைத்துச் சென்று தனக்கு ஒழுங்கு செய்து தந்துள்ள அறை போதியதாக இல்லை என்றும் தனக்கு இரு அறைகள் உள்ள வேறு ஹோட்டலில் ஒழுங்குசெய்து அந்த ஹோட்டலுக்கு உடனேயே மாற்றிவிடும்படி கேட்டுக்கொண்டார். அதன் விருப்பப்படி அவரை கல்கிசையிலுள்ள ஒரு ஹோட்டலுக்கு மாற்றிவிட்டு வீடு திரும்பினேன். அடுத்த நாள் அவரோடு இரு பேட்டி கண்டேன். ஒரு பேட்டி எதிர்நீச்சல் பட விளம்பரத்திற்காகவும் மற்றது நேயர்களுக்காகவும் நடாத்தினேன். இது முடிந்ததும் என் வீட்டிற்கு வந்து மதிய உணவு சாப்பிட்டு விட்டுத் தனது ஹோட்டலுக்கு போய்விட்டார். அன்று இரவு எதிர்நீச்சல் முதல் காட்சியில் அவர் தோன்றுவதாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அந்தக் காட்சியில் தோன்றுவதற்கு சற்று தாமதமாகிவிட்டது. இதனால் மற்ற விழாவுக்கு ஒழுங்குசெய்திருந்தார்கள். இதனால் சிலோன் தியேட்டர்ஸ் திரு. பேஜ் அவர்கள் ஒழுங்குசெய்திருந்த இரவு போஜனம் விருந்து தாமதமாகிறது. எல்லாம் உன்னால்தான் என்று என்னோடு முரணுக்கு வந்தார். ஏனெனில் அந்தக் குழுவில் இருந்த முக்கியமானவர்கள் நன்றாக மது அருந்தியிருந்தார்கள். நான் அவர்களைப் பொருட்படுத்தாது சௌகார் ஜானகி தியேட்டருக்கு வந்ததும் மேடைக்கு அழைத்துச்

(2ம் பக்கம் பார்க்க)

உளம் வசமானால்
உலகம் வசமாகும்
திருமுருகர்
21.8.77

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை ஓவியர் ச. பெனடிக்ற் சென்னைக்குச் சென்றபோது, திருமுருக கிருபானந்தவாரியாரது வீட்டிற்குச் சென்று, அவர்களை நேரிற் பார்த்து 10 நிமிட நேரங்களில் வரைந்த பேனு ஓவியம் இது. ஓவியத்தின்கீழ் தங்கள் கருத்தினை அன்புடன் எழுதுதல் வேண்டும் என ஓவியர் கேட்டபோது, ''உளம் வசமானால் உலகம் வசமாகும்'' என்னும் ஒரு வாசகத்தை உடனே எழுதி ஓவியரிடம் கொடுத்தார் வாரியார்.

பொப்பிசை எனப்படும் துள்ளல் இசை-(4)

மாதினி சிறிக்கந்தராசா- பி. ஏ.

இலத்திலே ''பொப்பூசிக்'' (Popular எனப்பட்ட இசை யூசிக்'' என மருவி இதைத் தமிழாராகிய த்தெடுத்து''பொப்'' ன்கிறோம். பொப்பி ''துள்ளிசை'' என்று ழிபெயர்த்து வருகி யிசை என்றும் இத ாம். இதுனை மெல் று கூறுவது சரியா வில்லை. மக்களிசை பொதுசன இசை றுவது பொருந்தும். சங்கிதம் எனப் சையானது இசை இசையறிவும் டைய ஒரு சிலர்க்கே இருந்தமையால், தோன்றுவதற்கு ஏற்பட்டது என்று னினும். இந்த மெல் னியல் பிழந்து நல் அடிப்படையான த்தை இழந்து, பாணியில் சென்று, முக்கியத்துவம் டனும், பொப் ன்றிற்று என்று பொருத்தம் போலத் . சங்கிதத்திலே வி அல்லது மனிதக் ன்மையாக நின்று அவ்வோசைக்கு ரலுக்கு எனைய கரு க்கவாத்தியங்களாக னையான இசைக் க) அமைகின்றன: பக்கவாத்தியங்கள் ர்கின்றன. இதை

இன்னும் சற்று விளக்கமாகச் சொன்னால், சாத்திரீய சங்கிதத்தில் மதைதர்மத்துக்கும் புத்திபூர்வமான பிரயோகங்களுக்கும் நிறைய இடம் இருக்கின்றது. அதாவது இங்கே இசை அனுபவம்,பாடுவோனின் அல்லது வாசிப்போனின் தனி அனுபவமாக அமைகின்றது.

பொப்பிசையிலே தனி அனுபவத்துக்கு இடம் குறைவு. கேட்பவர்களோடு சேர்ந்து பெறுகின்ற கூட்டான அனுபவம் பொப்பிசையில் நிறைய உண்டு. வழிநடத்தும் வாத்தியம், பக்கவாத்தியங்கள் என்ற பேதம் பொப்பிசையில்இல்லை. வழிநடத்தும் கருவியோடு பக்கவாத்தியங்களும் ஒத்தபடி சமமாக இயங்கும். சில சந்தர்ப்பங்களில் குருவை மிஞ்சிய சீடன்போல், பக்கவாத்தியங்கள், வழிநடத்து வாத்தியத்தை அமிழ்த்திவிடுதலும் உண்டு. பொப்பிசையில் வாத்திய இசைதான் தலையெடுத்துநிற்கும். வாத்திய இசைக்கு பாடுவோனின் குரலிசையும் உடலசைவுகளும் நெளிப்பு வளைப்புகளும் ஒருவித ஊக்கியாக உதவுகின்றன. குரலிசையும், பல்வேறு வாத்தியங்களிலிருந்து தோன்றும் பலவித சுரபேத ஓசையும் பின்னிப்பிணையும்போது ஒருவித ஒத்திசைவு தோன்றி, கேட்போரின் துள்ளல் உணர்வினை (சாந்தத்துள்ளல் உணர்வுகளை) பிரதிபலிக்கும்.அப்போது கேட்போனும் லயத்தில் மூழ்கி ஆடுகிறான். தன்னைமறந்து பாடவும் பாடுகிறான்.

மக்கள் ஈடுபாடு

சாமானியர், இதை இரசிப்பதற்கும் விரும்புவதற்கும் காரணம், இந்த ஒத்திசைவுப் பண்பு மட்டுமன்று. பொப்பிசைக்குப் பொருளாக அமையும் பாடல்கள் மிகவும் இலகுவான சொற்களால் ஆனவை. தெளிவான கருத்தும், அன்றாடப் பிரச்னைகளைக்கூறும் இயல்பும், நகைச்சுவையும், அவலச் சுவையும் பொப்பாடலில் இருப்பதால், மக்கள் அதன்பால் எளிதில் ஈர்க்கப்படுகின்றனர். தமிழ்ப் பொப்பிசை நிகழ்ச்சிகளில் சிங்களப்பாடல்கள் பங்குபற்றி வெற்றிநடைபோடுவதைக் காணும்போது, ஒருவித நையாண்டியையும், கொச்சையையும் கேட்பதில் மக்களுக்கு ஒருவித வேட்கை (தற்காலிக வேட்கை) ஏற்படுவது இயல்பு என்று எண்ணத் தோன்றுகிறது. இதுவும் ஆராய்ச்சிக்கு உரியது.

''பொப்பிசை மன்னர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பொப்பிசை பாடுவோரின் குரல் வளமானதாகவே உள்ளது. அவர்கள் குரலில் கனிவும் இருக்கிறது; பாடும் பாடல்களில் ஆழமான பொருளும் இருக்கிறது. இவற்றை விட, கூத்தாட்டமும், கரகாட்டமும் காவடியாட்டமும் இருக்கிறது. இந்த அசைவுகளும், கருவிகளால் எழுப்பப்படும் ஓசையும் சேர்ந்து, கூடியிருக்கும் கூட்டத்தினருக்கு ஒரு புதிய அனுபவத்தை, புளகாங்கிதத்தை அளிக்கின்றன. இதனால் அவர்களும் ஆடத்தொடங்கி விடுகிறார்கள். எவருமே, எல்லோருமே பங்குகொள்ள வாய்ப்பளிக்கின்ற பொப்பிசையை மக்கள் விரும்பியதில் வியப்பில்லைதான். ஆனால் இந்தப் பொப்பிசை மனிதனை எங்கே இட்டுச் செல்லும் என்பதுதான் கேள்வி. இசையின் நோக்கத்தை நிறைவேற்றப் பொப்பிசைக்கு முடியுமா? இதற்கு விடைகூற இப்போது முயலல் வேண்டாம். பொப்பிசையைப் பற்றி நான்இங்கே குறிப்பிட்ட கருத்துக்கள் எனதுதனிப்பட்ட கருத்துக்களே எனது கருத்துக்கு முரண்பாடான கருத்துக்களும் இல்லாமல் இல்லை. அவையே சரியானவையாகவும் இருத்தல் கூடும். ஆராய்ச்சி செய்து உண்மை உணருதல் வாசகர் கடன். இக்கட்டுரைகள் அத்தகைய ஆராய்ச்சிக்கு உதவுமேல் என் நோக்கம் ஓரளவேனும் நிறைவு பெறும்.

ஒழுக்கநெறியற்ற பிரார்த்தனையால் பயனில்லை

ஆங்கிலம்: ஆர். வி. எஸ்.
தமிழ்: வ. குகசர்மா

''பிரார்த்தனை சமயத்தின் சாரமும் உயிருமாகும். எனவே பிரார்த்தனை வாழ்வின் உள்ளீடாக அமைய வேண்டும்'' இவ்வாறு காந்திஜீ எழுதியுள்ளார்.

வைத்தியத்துறையில் நோபல் பரிசும் பெற்றவரும், சமயத்துறையில் ஆர்வமும் உள்ள அலெக்சிஸ் கரெல் என்பவர் ''நாம் இறைவனை மனம் உருகி பிரார்த்தனை செய்யும் போது, எமது உயிரும் உடலும் புனிதமடைகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்தாற்கூட அது வீண் போவதில்லை என்பது அவர் அபிப்பிராயம். தியானம், வணக்கம், பிரார்த்தனை என்பன பாபங்களை எரித்து பக்தி, புனிதத்தன்மை மன உறுதி என்பனவற்றை வளர்க்கும் என்பது முன்னோரின் அபிப்பிராயம்.

ஆனால் வாழ்க்கையில் இவற்றில் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. பெருமை, பேராசை, பிறருக்கு தீமை செய்யும் உணர்வு என்பன பிரார்த்தனையின் நோக்கங்களாக விருத்தியடைந்துள்ளன. மிகச் சிலரே பிரார்த்தனையால் உண்மையான திருத்தமடைந்துள்ளார்கள் இந்தக் கூற்று பிழையானதாயும் இருக்கலாம். வணக்கம், பிரார்த்தனை என்பவற்றின் பலன்களை அறிந்துகொள்ளவோ, மக்களின் ஆன்ம நிலையைப்பற்றி ஆராயவோ, விஞ்ஞானரீதியான அளவைகள் இல்லை.

தற்கால மக்களைக் கொண்டு இதனை ஆராய முற்படுவது, பிரயோசனமற்றதும், முடியாத நிலையுமாகும். எனவே நாம் புராணங்களையும், இதிகாசங்களையும், சரித்திரங்களையும் இதற்கு உதாரணமாக எடுக்கலாம். சரித்திரங்கள் இதற்கு உதவாமல் போகின்றன ஏனென்றால் அவை பிரார்த்தனையால் ஏற்படும் வெளிப்படையான வெற்றிகளையே கூறுகின்றன. அவற்றால் ஏற்பட்ட தோல்விகளைக் கூறவில்லை, எனவே நாம் புராதன புராண இதிகாசங்களையே எடுத்துக்கொள்ள வேண்டும். அவை பிரார்த்தனையாலும், வணக்கத்தாலும், தியானத்தாலும் ஏற்படும் வெற்றிகளை மாத்திரம் கூறவில்லை. அதன் மறுபக்கத்தையும் எடுத்துக் கூறுகின்றன. இந்து புராணங்களிற் காணப்படும் அரசர்களும், மேற்கு நாடுகளில் சமயநூல்களிற் கூறப்படும் பிசாசுகளும் பிரார்த்தனையால் ஏற்படும் எதிரான பலனுக்கு தெளிவான உதாரணமாகும்.

இராவணன், கும்பகர்ணன், விபீடணன் ஆகிய மூன்று சகோதரர்களை இங்கு உதாரணமாக எடுக்கலாம். அவர்கள் பிராமண குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்களுடைய தந்தையும், பாட்டனும் முனிவர்கள். அவர்கள் மிகப்பல வருடங்களாக தவம் செய்தார்கள். அவர்களின்முன் பிரமாதன்னுடைய அடியார்கள்சூழ காட்சி கொடுத்தார். இராவணன் போரில் பிறரால்வெல்லுவதற்கரிய வரத்தையும், பல பிரயோசனமற்ற வரங்களையும் பெற்றுக்கொண்டான். கும்பகர்ணன் நித்திரைவரத்தை பெற்றுக்கொண்டான். வீபீடணன் ஒருவனே சரியான நல்ல வரத்தைப் பெற்றுக்கொண்டான் நெடுங்காலம் அவர்கள் செய்த தபசு, இறைவனின் காட்சி, கொடுக்கப்பட்ட வரம் இவைகள் ஒன்றும், இராவணன், கும்பகர்ணன், ஆகியோரது மனோவிருத்தியை அவர்களது உள்ளத்தை மாற்ற முடியவில்லை தபசும் அதனால் அவனுக்குக் கிடைத்த வரமும் இல்லாவிட்டால் இராவணன் இவ்வளவு கொடுமையான செயல்களைச் செய்திருக்க முடியாது என்பது வெளிப்படை.

யேசுநாதரின் கொள்கைகளை நம்பிக்கையோடு, பின்பற்றிய சீரர்களில் ஒருவன் அவரைப் பகைவரிடம் காட்டிக் கொடுத்தான். மற்றொருவன் அவரை மூன்றுமுறை எதிர்த்துள்ளான்.

ஆன்ம ஈடேற்றம்

விசுவாமித்திரர் ஒரு அரசனாக இருந்தபொழுது, வசிட்ட ரிஷியிடமிருந்த தேவப்பசுவை பலவந்தமாக கொண்டுபோக எடுத்த முயற்சி தோல்வியடைந்தது விசுவாமித்திரர் சிவபெருமானை நோக்கி நெடுங்காலம் தவம் செய்தார். சிவபெருமான் அவர்முன்தோன்றி பல தேவ அஸ்திரங்களைக் கொடுத்தார். அந்த அஸ்திரங்களைக் கொண்டும், விசுவாமித்திரர் அந்தப்பசுவை அடைய முடியாமற் போய்விட்டது. இவ்வித உதாரணங்கள் ஒருவனின் ஆன்ம ஈடேற்றம் தவத்திலும், பிரார்த்தனையிலும் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது எனலாம்.

''ஒருவனுடைய சரியான ஒழுக்கம் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்தனையிலும் பார்க்க அவசியமானது'' என்பது எனது எண்ணம். பலர் இந்த எண்ணத்தை மறுக்கக்கூடும். சில வருடங்களுக்கு முன் சுவாமி சிவானந்தர் எழுதிய ''கிருஷ்ணவீலாவும் அதன் பத்ப்பனைகளும்'' என்னும் புததகத்தில் காணப்பட்ட சிலவரிகள் இந்த எண்ணத்தை வலியுறுத்துகிறது அவைவருமாறு. ''யார்என்னை மிகுந்த பக்தியுடன் வழிபாடு செய்து கொண்டு தங்களின் கடமைகளை சுயநலமில்லா நோக்குடன் செய்து வருகிறார்களோ, அவர்கள் சாத்வீக இயல்புஉள்ளவர்கள். அவர்கள் என்னைப் பணத்திற்காகவும், போகத்திற்காகவும் வழிபடும் போது ராசதத்தன்மை அடைகிறார்கள். மற்றவர்களை வருத்தவும், அதிகாரம் செலுத்தவும் நினைத்து வழிபடுபவர்கள் தாமதகுணத்தினர் ஆவர்''.

இந்த உதாரணம் மனிதருடைய மனவிருத்தியே பிரார்த்தனையால் ஏற்படும் பல்வேறு பலன்களைக் கொடுப்பதைக் காணமுடிகிறது. தவமும் பிரார்த்தனையும்தான் சான்றோர்களை உண்டாக்குகின்றன என்பது ஒருபக்க நியாயம் தான். ஆனால் உண்மையான ஞானிகள் பிரார்த்தனையாலும், விரதங்களாலும், தவத்தினாலும் மாத்திரம் ஆக்கப்பட்டவர் அல்ல. பரோபகார விருப்பம், அருள் நல்லொழுக்கப் பயிற்சி ஆகியனவும் சேர்ந்தே ஒரு சான்றோனை ஆக்குவன.

சிறந்த பக்தன்

பகவத புராணத்தில் நாரதர் வசுதேவருக்கு பின்வருமாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது. எல்லா உயிர்களிலும் பொருட்களிலும் இறைவனை காண்பவன் சிறந்த பக்தனாவான். இறைவனை வணங்கிக் கொண்டு வறியவர்களுக்கும் துன்பப் படுகிறவர்களிடத்தும் இரக்கமுடையவராய் ஆனால் கடவுள் நம்பிக்கை யற்றவர்களை யார்தூற்றுகிறார்களோ அவர்கள் மத்தியநிலையுடைய பக்தர்கள். இறைவனை மாத்திரம் வணங்கிக்கொண்டு சமூகத்திற்கு ஒருவித நன்மையும் செய்யாதிருப்பவன் மூன்றாந்தர பக்தனாவான். நாரதர் இறைவனை நன்றாக வணங்கிக் கொண்டு உயிர்களுக்குக் கொடுமை செய்யும், செருக்கு நிறைந்த அதமபக்தர்களையும் சேர்த்திருக்கலாம்.

உண்மையான பக்தன் பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும், பேதம் கற்பிக்க மாட்டான். கீதையும் தவம் செய்பவர்களை மூன்று வகுப்பாக வகுத்துள்ளது.

பிரார்த்தனையும் ஜெபங்களும் யாவருக்கும் பொதுவானவை. அதன் பலன்கள மக்களின் மனோவிருத்திக்குத் தக்கதாகவே இருக்கின்றன. பழக்கத்திலும் பார்க்கத் தியானம் மேம்பட்டது. தியானத்திலும் துறவுநிலை அல்லமற்றவர்களுக்காகத் தனது சுகங்களைப் பரித்தியாகஞ் செய்தல் சிறந்தது. இந்தப் பரித்தியாக நிலை சாதனங்கள் யாவற்றிலும் சிறந்தது.

கீதை இதைத் திரும்பத் திரும்பப் பல்வேறு விதமாகக் கூறுகிறது. சாத்வீக அல்லது தெய்வீக நெறிதான் மானுடரை விலங்கிலிருந்தும், நல்லவரைக் கெட்டவர்களிலிருந்தும் பிரிக்கிறது. கீதையின் கருத்துப்படி வழிபாடும், தியானமும், மாத்திரம் இந்த வேறுபாட்டிற்குக் காரணமல்ல. கோபம், பொறாமை, தற்பெருமை முதலிய கெட்ட குணங்களைப் போக்கல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தல் தியாக மனப்பான்மையுடையவனாக்குகின்றது,

ஒழுக்க நெறியோடு சேராத பிரார்த்தனை சிறந்த பக்தர்களை உண்டாக்க முடியாது. சிறந்த பலன்களையும் கொடுக்க முடியாது என்பதே இக்கட்டுரையில் காட்டப்பட்ட உண்மைகளாகும்.

(நன்றி: பவான்ஜேர்னல்)

தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—12

நகைச்சுவையால் தமிழை அழகு செய்தவர்!

தமிழ்நாடு வந்த ஐரோப்பிய கிறிஸ்தவ குருமார் தமிழ் மொழியைப் பேணி, போற்றி, புதுக்கி வளர்த்தனர் என இதுவரை கண்டோம். அவர்களது வளர்ப்பினாலேயே தமிழ் மொழி உருவம் மாறியது, உரைநடையைக் கண்டது; அச்சுவர்கனம் ஏறியது; அகராதியைக் கண்டது. அந்நிய மொழிகளில் அலங்காரம்பெற்றது. தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் எனக் கூறப்படவும்பெற்றது. இந்திய மொழிகளுள் முன்னணியிலே திகழும் இடத்தையும் பெற்றது. தமிழன் என்போன் தன் மொழி, கலை காரணமாக தலை நிமிர்ந்து நிற்க அவனைத் தட்டிவிட்டதும் இந்த ஐரோப்பிய கிறிஸ்தவரின்தொண்டே. இவ்வகையில் தமிழர் என்று பிள்ளை அவர்கள் போற்றிப் பாடினார்கள். இவர் நேர்மை தவறாதவர். எதையும் தைரியமாக எடுத்துக்கூறும் தைரியமுடையவர். பேச்சிலும் செய்கையிலும் நிலை தவறாதவர். இவரது ஆற்றலைக்கண்ட அன்றைய அரசாங்கம் இவரை ஓர் நீதிபதியாக நியமித்தது. கண்ட கண்ட பொய் வழக்குகள் வருவதையும், அவற்றைச் சாட்டி வயிறு வளர்க்கும் வழக்குரைஞர்களையும் கண்ட வேதநாயகம்பிள்ளை, கேலியாகவும் அதேவேளை அறிவுரையாகவும் அநேக பாடல்களைப் பாடினார். இவருக்கு எதிராகச் சூழ்ச்சிகளும், திட்டங்களும் நடந்த போது, 'என்ன வந்தாலும் மனமே ஐயன் இருக்கையில் என்ன விசனமே' எனப் பாடி ஆறுதலடைந்தார்கள்.

வண. எம். ஏ. இரத்தினராஜா

தம்மைக் கூறுவோர் எவரும் தமிழ் வளர்த்த கிறிஸ்தவ குருமாருக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்களே என்பது மறுக்கொணா உண்மையாகும். இந்த ஐரோப்பிய கிறிஸ்தவ குருமாரைப்பின்பற்றி, தமிழ் வளர்க்கும் தொண்டிலே தம்மை அர்ப்பணித்தோர் அநேகர். இவர்களது ஆர்வம் சிந்தை முயற்சி என்பவற்றை தம்மிடமும் கொண்டோர் அநேகர். இவ்வாறு இதுவரை வளர்ந்த தமிழை இன்னமும் வளர்க்கப் பேரவாக்கொண்டு முன்னணிக்கு வந்தோர் அநேகர். இவர்களே தமிழ்நாடும் ஈழமும் தந்த கிறிஸ்தவ தமிழ் தொண்டராவர். இவர்கள் திருத்தொண்டை இனிஆராய்வாம்.

தமிழ்நாட்டிலே தோன்றிய தனிச் சிறந்த தமிழ்க்கிறிஸ்தவ கவிஞருள் ஒருவர் வேதநாயகம் பிள்ளை என்பவராவார். இவர் தமது நகைச்சுவை ததும்பிய நூல்களால் தமிழை அழகு செய்தவர். தமிழிலே நவீனக் கதைகள் பல எழுதியவர். தமிழிலே 'நாவல்' பிறக்கக் காரணமாயிருந்தவர் இவரே. இவர் குலத்தையும் குணத்தையும் 'கொங்குராய கோத்திரம் அதனில் வந்தவதரித்த செந்தமிழ்க் குரிசில்' என வித்வான் மீனாட்சிசுந்தரம்

இவர் தமது பாடல்களிலே பரோபகாரம் போன்ற அறங்களைப் போற்றினார். பஞ்சமா பாதங்களைக் கடிந்தார்; பரிதானம் பெறுவோரையும் பற்றுள்ளம் உடையோரையும் பரிகசித்தார். நல்லரசின் தன்மையையும் வல்லரசின் தன்மையையும் அவர் விளக்கிக் காட்டினார்.

தம்மிடம் வந்த வழக்குகளை ஆராய்ந்த வேதநாயகம்பிள்ளை அவற்றிலே எவ்வளவு பொய்யும் களவும், கபடமும் சூதும் நிறைந்திருந்தன என்பதைக் கண்டார். வாழ்க்கை முழுவதும் மனுஷன் போக்கிலேயே பேசினால் அவன் கடவுளை நினைப்பதுதான் எப்போது என்று கவலையுற்றுப் பாடினார்.

'தொண்டை கிழித்துக்
கொண்டு
சண்டை செய்யும்
வக்கீல்கள்
அண்டையில் இருந்து நம்
மண்டையை உடைத்தால்
ஆண்டவனை நினைப்ப
தெப்போது நெஞ்சே
ஐயன் பதத்தை நினைப்ப
தெப்போது நெஞ்சே'

அவரது கிறிஸ்தவ விசுவாசம் எவரையுமே கவர்ந்தது. வாய்மொழியிலே மட்டுமன்றி வாழ்க்கையிலும் தம் விசுவாசத்தை வாழ்ந்து காட்டினார் வேதநாயகம்பிள்ளை. ஓர் உண்மைக் கிறிஸ்தவனை, கிறிஸ்தவரல்லாதோரும் விரும்புவர் என்பதற்கு அவர் வாழ்க்கையும் ஓர் எடுத்துக் காட்டாயிருந்தது. தம்மை ஆட்கொண்ட கிறிஸ்து பெருமளவில் ஆழ்ந்த பக்தியுடையவராக இவர் வாழ்ந்த போதிலும், கடவுள் பெயரால் மக்கள் கலகமிடுவதை இவர் அறவே வெறுத்தார். இக் கருத்தை அடிப்படையாய்க் கொண்டு இவர் ஆக்கிய பாடல்கள் அநேகம். அவற்றைத் திரட்டி, 'சர்வ சமய சமரச கீர்த்தனம்' என்ற நூலாக இவர் வெளியிட்டார்.

(தொடரும்)

குட்டிக் கதை

பேராசைக் கிழவன்

முன்னொரு காலத்தில் இரு ஏழைக் கிழவர்கள் ஒரு குக்கிராமத்தில் வாழ்ந்துவந்தனர். அவர்கள் வேலைதேடி வாழ்வதற்காக வேறொரு பெரிய கிராமத்திற்குச் சென்றனர்.

அவர்கள் மிகுந்த ஊக்கமுடன் உழைத்ததால் மூன்றே ஆண்டுகளில் அவர்கள் ஒவ்வொருவரிடமும் நூறு ரூபிள்கள் சேர்ந்தன.

''இந்தப் பணத்தை யாராவது கொள்ளையடித்துவிடுவார்கள். எனவே இதை எங்காவது ஒழித்துவைப்போம் அல்லது ஒரு நம்பிக்கையானவரிடம் பாதுகாப்பாகக் கொடுத்துவைப்போம்'' என்றான் ஒரு கிழவன்.

அந்தப்பணத்தை என்ன செய்வது எனச் சிறிதுநேரம் யோசித்த அவர்கள் அதே கிராமத்திலிருந்த தன் எல்லா விரல்களிலும் சிறு மணிகளை அணிந்த ஒரு வயோதிபரிடம் சென்றார்கள்.

''வயோதிபரே, ஏன் இப்படி விரல்களில் மணிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று கேட்டார்கள்.

''இங்கு நிறைய நுளம்புகளும் வண்ணத்துப் பூச்சிகளும் வண்டுகளும் பறந்து திரிகின்றன. அவை தாழப் பறக்கும் போது என்னால் தீங்கிழைக்கப் படலாமல்லவா; எனவே இந்த மணிகள் அவற்றை எச்சரிக்கை செய்கின்றன''

கிழவர்களில் ஒருவன் தனது பணத்தை அந்தப் பெருமகனான வயோதிபரிடம் பாதுகாப்பாக வைக்கலாமென எண்ணினான். மற்றவன் அதை விட சிறிது சிறப்பாக சிந்தித்தான்.

சில காலத்தின்பின் இன்னமும் அதிகம் உழைத்துச் சேமித்தபின் அவர்களிருவரும் தம் வீடுகளுக்குச் செல்லலாமென முடிவு செய்தார்கள்.

தன் பணத்தை அந்த மணி கட்டிய வயோதிபரிடம் கொடுத்திருந்த கிழவன் அங்கு சென்று அதைக்கேட்டான். ஆனால் அவரோ கோபத்துடன் கத்தினார்:

''உன்னைப் போன்ற ஒருவனுக்கு நூறுரூபிள்கள் எப்படிக் கிடைக்கும். அதை உன்னால் கனவுதானும் காணமுடியுமா?''

உடனே கிழவன் அந்த வயோதிபரை தனது வலிய கரங்களால் இழுத்தெடுத்தான். அப்போது அவரின் விரல்களில் கொழுவப்பட்டிருந்த மணிகள் குலுங்கி பெருத்த ஓசை ஏற்படுத்தின.

பறிகொடுத்த மனிதனால் என்ன செய்ய முடியும்? அவன் தெருவோரத்திலமர்ந்து கண்ணீர் விட்டான். அப்போது அவ்வழியாக வந்த ஒரு பெண் அவனை நோக்கி,

''ஏனிப்படி அழுகிறாய்? உனக்குத்தவறு செய்தது யாரெனச் சொல்''

கிழவன் தனக்கு நேர்ந்ததை கூறினான். சிறிது யோசித்துவிட்டு அந்தப்பெண் சொன்னாள்:-

''நாளைக்கு அவரிடம்போ. உனக்கு உன் பணம் கிடைக்கும்'' ஆனால் இனியாவது புத்திசாலித்தனமாக நடந்துகொள், தேனொழுகும் பேச்சும், மணிநாதமும் உன்னை ஏமாற்றாமல்பார்த்துக்கொள்''

''மறுநாள் காலை அந்தப் பெண், வயோதிபரிடம் சென்று கூறினாள்;-

''தயவு செய்து எனக்கோர் உதவிசெய்ய வேண்டும். எனது

(2ம் பக்கம் பார்க்க)

கணபதி வணக்கம்

'கணபதி' வணக்கம் இந்துசமய வழக்குகளில் முதன்மைபெற்று விளங்குகின்றது. கணபதியின் தோற்றம்பற்றிய புராணக்கதைகள், தத்துவங்கள் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன. திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்டுள்ள கணபதி என்னும் நூலிலிருந்து இது தொகுக்கப்பட்டது.

எமக்கு ஊழால் வரும் இடையூறு வந்தேதீரும். புத்தி தத்துவத்திற்கு அதிதேவதை யான கணபதியை வழிபடுவ தால் புத்தியால் வரும் இடை யூறுகளை முன்னரே அறிந்து கொள்ள முடியும் என்பது புராணகதைகள் புகட்டும் உண்மை.

யானைக்கு நினைவுவன்மை, காண்டல், கேட்டல் ஊறு ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிவு உடைமை, அளப்பரும் சாந்த முடைமை, இதஞ்செய்வார்க்கு வசமாய் உதவுவது, ஆகிய இவை குணங்களாம். ஆத லால் இக்குணங்கள் எல்லாம் அமைந்த பெருமானுக்கு யானைத்தலை அமைந்தது.

சித்தியும் புத்தியும் விநாய கருக்குத்திருவடிகளாக அமைந் துள்ளன.

அவருடைய தாழ்செவி சர் வஞ்ஞ சக்தியையும் ஏகதந்தம் பரஞானத்தையும் ஒடிந்த தந்தம் அபயத்தையும், லம் போதரம் பொறுமையையும் அறிவிக்கும் அடையாளங்க ளாம்.

திருவடி:- ஞானம்.

பெருவயிறு:- உலகங்களும் உயிர்களும் தம்முள் அடக் கம்.

ஐங்கரம்:- 1 பாசம்உள்ள கை படைத்தல். 2 அங் குசம்உள்ள கை அழித் தல். 3 அ ப ய க ர ம் உயிர்களுக்கு அஞ்சாமை யை அளித்துக் காப்பது. 4 வாதகரம் (மோதகம் ஏந்தும் கை) அருளல். 5 துதிக்கை மறைத்தல் தொழில்.

கொம்புகள்:- ஒ டி ந் த கொம்பு- அபரஞானமா கிய விந்து. ஒடியாத கொம்பு: நிலைத்த இறை வனையுணர் வ தற் கான வாயிலான பரஞானம். இந்த இருகொம்புகளே பதிஞானம் பசுஞானம் என்பதுமுண்டு

தாழ்செவி:- இரு செவிகளும் உயிர்களுக்கு மலவாதனை தாக்காது காத்துவினை வெப்பம்போக்குவன. இது எல்லாமறியும் தன்மை யைக் குறிப்பது.

முக்கண்:- மூத்தொழிலைச் செய்யும் சோம், சூரிய அக்கினிகள்.

பிறைமுடி:- தவவிரதங்க ளால் அறியாமை தேய்ந்து உண்மை ஞானம் பெற்ற உயிர்களே சிரத் தானம் எய்துதற்குரிய வையென உணர்த்துவது

மும் மதம்:- ''கலைஞானம், மெய்ஞானம், சிவஞா னம்''

சர்ப்பாபரணம்:- குண்டலி தரிசனத்தைக் குறிப்பது. உதரபந்தம்பாம்பு, அணி பாம்பு, பூணூல் பாம்பு. பாம்பு குண்டலிசக்தியின் சக்தியின் வடிவம். மூலா தாரத்தில் குண்டலியே விநாயகர் வி ள ங் கு ம் இடம்.

யானைமுகம்:- யானை விலங் கினங்களுள் மிகப்பெரி யது, ஆற்றல் மிக்கது, கணபதியின் தோ ற் ற ம் பற்றி சிவபுராணம், மத்ஸ் புராணம், சுப்பிரபேதம், காஞ் சிப்புராணம், கந்தபுராணம், விநாயக புராணம் என்பன பலவாறுக உரைக்கின்றன.

புராணக் கதைகள்

திருக்கையிலையில் பிள்ளை ஆசை காரணமாக உமாதேவி ஒரு முறை மண்ணால் உருவ மைத்து உயிர் கொடுத்துத் தன் மடியில் வைத்துக் கொஞ் சிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட சிவன் புதல்வர்ப் பேற் றைக் கொண்டாடத் தேவர் கள் எல்லோரையும் அழைத் தார். தேவர்களோடு சனியு னும் வந்தான். சனியின் பார்வையால் குழந்தையின் தலை அறுபட்டுப் போயிற்று. அறுந்த தலையும் மறைந்தது. உமை வருந்தினர். சிவன் பூத கணங்களைப் பார்த்து 'இவ் வனத்தில் வடக்கே தலைவைத் துறங்கும் விலங்கொன்றின் தலையாவது கொணர்க' 'என் றார். அவர்களும் அங்ஙனமே சென்று ஒரு யானைத்தலையைக் கொணர்ந்தார்கள். சிவபெரு மான் அதனைப் பொருத்திக் குழந்தையை உயிர்ப்பித்துக் கொடுத்தார். இறைவன் யானைமுகப் புதல்வரைக் கண நாதராக்கினார் என்கிறது சிவ புராணம்.

உமாதேவியார் தன்தோழிய ரான ஜயை, விஜயைகளுடன் அந்தப்புரத்திலுள்ள திருமஞ் சன அறைக்கு நீராடச் சென் றனர். அப்போது ஜயை என் பாள் ''சிவகணத்தவர்களான நந்தி, பிருங்கிகளைத்தானே யாரும் காவலர்களாக வைத் திருக்கிறோம். நமக்கென்று தனியாளைப் பெருமாட்டி ஏன் படைத்து வைத்துக்கொள்ளக் கூடாது'' என்று வேண்டிக் கொண்டாள். உமையம்மை தன் திருமேனியின் அழுக்கை உருட்டி உருவாக்கி உயிர் கொடுத்து காவல்வைத்துச் சென்றனர். அக்காலை சிவன், உமையம்மையாரைக் காண உள்ளே வந்தார். புதுக் காவ லன் தடுத்தான். முடிவில் தர மறியா அவன் தலையைப் பரசி னல் வெட்டினர். செய்தி அறிந்த புராட்டி வருந்தினர். சிவபெருமான் யானைத் தலை யைப் பொருத்தி உயிர்ப்பித் தனர் என மத்ஸ்ய புராணம் விளக்குகிறது.

உமையும் சிவனும் உய்யான வனத்திற்குச் சென்றனர். அங்கே பிடியும் களிறும் தம் முட்கலந்து நின்றன. அவற் றைக் கண்ட இவர்களும் பிடியுங் களிறும் ஆயினர்; பிள்ளையார் பிறந்தார் என்று சுப்பிரபேதம் உரைக்கிறது.

சிவனும் உமாதேவியும் உய் யானம் சென்றனர். அங்கே ''மந்திரசாலா'' என்ற மண் டபத்தில் ஒரு பிரணவம் எழு

தொகுத்தவர்:
''முருகு''

தப் பெற்றிருந்தது. இருவரும் அதனையே உற்றுநோக்கினர். சமஷ்டிப் பிரணவமாகிய அது பிரிந்து இறைவன் எழுத்தா கிய அகரம் களிருகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பிடியாகவும் ஆயிற்று. அவை இரண்டும் கூடினர். விநாய கர் தோன்றினர் எனக் காஞ் சிப் பராணம் விரிக்குகிறது.

உய்யானத்திருந்த சித்திர மண்டபத்திலே ஒரு பிரணவம் எழுகப்பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் உற்று நோக்கி னர். பிரணவம் பிடியும், களி றுமாகிச் சேர்ந்தன. பிள்ளை யார் அவதரித்தார் என விரிக் கிறது கந்தபுராணம்.

பரமசிவன் உலகைப் புனருத் பத்தி செய்யத் திருவுள் ளங்கொண்டு விநாயகராக உருவுகொண்டனர் என வி நா யக புராணம் விரிக்கிறது.

ஓங்காரம் பரம்பொருளை உணர்த்தும் சொல். பிரண வம் பிள்ளையார் வடிவம். பிர ணவத்தின் திரிந்த வடிவம் பிள்ளையார் சுழி என்பர்.

பிரணவமே வேதமூலம், இதுவே எல்லா ஒலிகட்கும் மூலகாரணம்.

முண்டகோபநிஷத் ''பிரண வம் வில் வடிவானது'' என் றது. சர்ப்ப வடிவான குண் டலினி இது; மூலநாடி, அன் னத்தின் குரல் போன்ற ஒலி யுடையது என்கிறது ஞான சித்தியாதமம்.

பிரணவம் ஐந்தெழுத்துக்க ளுடைய கூட்டம். முதல் உரு நட்சத்திர வடிவு. அதாவது வட்டப் புள்ளி ●.

இரண்டாம் வடிவு தண்டப் போல் படுக்கையிற் கிடக்கும் நேர் கோடு —.

மூன்றும் உரு வட்டம் O.

நான்காம் உரு பிறைமதி.

ஐந்தாம் உருவாகிய பிந்து. புள்ளி வடிவு. ●

இவற்றுள் வட்டப் புள்ளி யும நேர்கோடும் சேர்ந்து ''உ'' பிள்ளையார் சுழி ஆகி றது. இந்தச் சுழி இட்டாலே போதும். பிள்ளையார் வணக் கம் ஆகிவிடுகிறது.

முன்னர் காட்டியவண்ணம் ஒலி வடிவிலும் ஐந்தன் கூட் டாகிய பிரணவத்தில் அகரம், சிவம், உகரம் சத்தி, மகரம் மலம், நாதம் மாயை, பிந்து உயிர். இவற்றுள் அகர, உகர வடிவாக உள்ள ''உ'' பிள்ளை யார் சுழி, சிவசத்திகளின் சேர்க்கையாகும்.

மற்றோரிடத்தில் திருமூலர் அகாரம்உயிர், உகாரம் இறை, மகாரம் மலம்என்றுஅருளினர்.

அகர உகரச் கூருக இணைந்த பிள்ளையார் சுழியை உற்று நோக்கும்போது இறையுடன் நாம் ஒன்றியிருக்கும் நிலையைக் காணலாம்.

தாடலே போல அகாரமாகிய உயிர், உகாரமாகிய இறைவ னோடு இயைந்து அகாரமாகிய உயிர் வடிவம் அற்று, உகர வடிவே வடிவாய்- பிள்ளையார் சுழியாய்-அத்துவிதமாய் நிற் கும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி நிலையைத் தெரிவிக்கும் குறியீடாகும்.

(9-ம் பக்கம் பார்க்க)

பரீட்சையில் சித்திபெற வேண்டுமா!

பாடங்களை இவ்வாறு பயிலுங்கள்!

மனம் சோர்வடையும் போதும், கல்வியில் ஓர் தேக்க நிலை அடையும்போதும், உங்க ளது குறிக்கோளையும், அபிலா சைகளையும் எண்ணிப்பாருங் கள். உங்களது தொழில்துறை ஈடுபாட்டினையும், அடைய விருக்கும் உயர் பதவிகளையும் சமூக பொருளாதார மேம் பாட்டினையும் எண்ணிப்பா ருங்கள். கற்பனைக் கண் கொண்டு நீங்கள்அடையவிருக் கும் பெயரையும் புகழையும் எண்ணிப்பாருங்கள். இன்றில மணித்தியாலங்கள் நீங்கள்பாடு வதன்மூலம், வருடக்கணக்கில் அடையவிருக்கும் நன்மைகளை யும் நயங்களையும் எடைபோட் டுப் பாருங்கள்! இன்று செய் யும் இச்சிறிய தியாகமே, சில வருடங்களுக்குப்பின் வெற்றிப் பெருவெள்ளமாக ஊடறுக்கப் போகின்றது என்ற உண்மை யினை உணருங்கள்! இவ்வா றெல்லாம் மனம் சோர்வடை யும் போதும் தேக்கநிலை அடையும்போதும் சில நிமி டங்கள் ஊக்கமுடகச் சிந்தனை கள் ஊட்டிவந்தால் அச்சோர் வும் சோம்பலும் பஞ்சாகப் பறந்து, கல்வியைத் திறமை யாகப் பயிலுவதற்கேற்ற மனநிலையும் மனப்பக்குவமும் மனவலிமையும் தோன்றிடும்.

கல்வி நுணுக்கங்கள்

1. ஏதாவதோர் பாத்திரத் தினைப் பயிலத்தொடங்குமுன், அப்பாடத்தில் அடங்கியிருக் கும், உபதலைப்புக்கள், முக வுரைகள், சுருக்கவுரைகள், விளக்கவுரைகள், முடிவுரை கள், அப்பாடமுடிவில் காணப் படும் வினாக்கள் முதலியன வற்றினை வாசித்தபின்னரே, அப்பாடத்தினை விரிவாகவும் நுணுக்கமாகவும் பயிலுதல் வேண்டும். இப்பயிற்சியினை மேற்கொண்டால் எப்பாட லும் இலகுவாகத் தோன்றும்.

2. வி ப ர வி ள க்கப்படங் கள், புள்ளிவிபரப்படங்கள், விளக்க அட்டவணைகள், முத லிய படங்களை விபரமாக ஆராய்ந்து ஆய்வுகொள்ளுங் கள். எவ்வாறு ''ஓர் படம் ஆயி ரம் சொற்களுக்குச் சமமா னதோ'' அதேபோலவே விபர வினாக்கப்படங்களும் ஆயிரம் சொற்களால் விபரிக்கமுடியா தவற்றினை இலகுவில் விளங் கப்படுத்தும் தன்மைவாய்ந் தவை. விபர விளக்கப்படங் களை ஆராய்ந்து படிப்பதன் மூலம்நீங்கள் பின்வரும்நன்மை களை அடையலாம்.

(அ) பாடங்களை இலகுவில் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும்.

(ஆ) நூறு சொற்களால் எழுதி எடுக்கும் புள்ளிகளை விட ஓர் வடைபடம் வரைந்து பெறும்புள்ளி அதிகமாக இருக் கக்கூடும். எவ்வாறுயினும், வரைபடத்துடன் சமர்ப்பிக் கப்படும் விடைகளுக்குக் கூடு தலான புள்ளிகள் கொடுக்கப் படுகின்றன.

க. சுகதாசன்

(இ) வரைபடங்கள் இலகு வில் விளங்கியபின் அப்பாட மும் மனதில் இலகுவில் பதி ந்து விடும்.

ஞாபக வங்கி

பாடங்களைக் கே ட் டோ அன்றேல் வாசித்தோ அறிந்த பின்பு அப்பாடங்களை நீண்ட காலம் நினைவுடன் வைத்தி திருக்க விரும்பினால், அவற்றை நீங்கள் உடனுக்குடனும் ஓய் வாக இருக்கும்போது மனதில் மீட்டுப்பார்த்தல் வேண்டும். அப்பாடங்களை நினைவூட்டல் செய்தல்வேண்டும். இப்படிப் பல சமயம் நினைவூட்டல் செய்யும்போழுதே அவை கள் உங்களது ''ஞாபகவங்கி யில்'' பதியப்படும். ''ஞாபக வங்கியில்'' போடப்படும் விடயமெல்லாம் நீங்கள் விரும் பும் பொழுதெல்லாம் உங்கள் நாவிலும் நற்கரங்களிலும் களிநடம்புரிந்திடும். இஞ்ஞா பக வங்கியில் எவ்வளவுக் கெவ்வளவான விடயங்களை யும் தேக்கிவைத்திடலாம். ஓர் சராசரி மனிதன் இஞ் ஞாபக வங்கியின் சக்தியில் பத்துவிதத்தினைக்கூடச் சரியா கப் பயன்படுத்தவில்லை என்று கூறப்படுகின்றது.

மறுபார்வையீடு

திறமைமிக்க கல்விக்கு மறு பார்வையீடும் மதிப்பாய்வுரை யும் மிகவும் இன்றியமையா தது. பயின்ற பாடம் ஒன் றினை, அன்றும், ஓர்வார எல் லையின் பின்பும், மீண்டும் ஓர் மாத எல்லையின் பின்பும், அதன்பின்பு ஓர் ஆறுமாத கால எல்லையின்பின்பும் மறு பார்வையிடு செய்தல் அவசிய மாகும். இப்படிமறு பார்வை யீடு செய்யப்பட்ட பாடங் கள் மட்டுமே ஒருவனது ஞாப கத்தில் அறுபது தொடக்கம் எழுபது சதவீதமளவில் நிலை த்து நிற்கும் தன்மைவாய்ந் தது. இவ்வாறு மறுபார்வை யீடு செய்யாத பாடங்கள் யாவற்றையும் ஒருவர் மிக விரைவில் மறந்துவிடக்கூடும்.

பயின்ற கல்வியினைக் கூடிய வரை செயல்முறைப்படுத்துவ தன் மூலமும், நடைமுறைக் குரிய சந்தர்ப்பங்களில் பயன் படுத்துவதன் மூலமும், காரிய சாத்தியமான விடயங்களில் செயல்முறைப்படுத் து வ தன் மூலமும், அக்கல்வியினை உங்க ளது ஞாபகத்தில் பல்நெடுங் காலம் வைத்துக்கொள்ள லாம்.

நீங்கள் பயின்ற கல்வியை மற்றோற்கு ஊட்டுவதன் மூல மும், மற்றோற்கு எடுத்துரைப் பதன் மூலமும், அக்கல்வியினை நீண்டகாலம் ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். ''மற் றோற்குக் கல்வி ஊட்டுவதன் மூலமே திறமையாகக் கற்க முடியும்'' என்ற ஆங்கிலப் பழ மொழிக்கிணங்க ஒழுகுவோர் வாழ்வில் ஞாபகசக்தி பொங் கிப் பெருகிடும்.

கவனம்செலுத்துதலும் குறிப்பெடுத்தலும்

1. அன்று நடைபெறவிருக் கும் விரிவுரை விடயத்தினை தயார் செய்துகொண்டு வகுப் பிற்குச் செல்வதினால் பின்வ ரும் நன்மைகளை அடைய லாம்.

(9ம் பக்கம் பார்க்க)

இப்படித்தான் இந்தியா சென்றேன்

பழனி கோயிலில் வர்த்தகர்கள்தொல்லை

எஸ். கே. காசி

திருச்சி வந்தடைந்தபோது நண்பர் சிவாவுக்கு அசோக் பவன் விடுதி விலாசத்திற்கு அவசரமாக கடிதம் ஒன்று வந்திருந்தது. சிவாவின் தங்கைக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த திருமண வைபவம் முன்கூட்டி நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இவரது தாயார் கடிதம் எழுதியிருந்தார். மணப்பெண்ணுக்குக் கூறையும், மணமகனுக்குப் பட்டுவேட்டி சால்வையுடன் ஜனவரி 21-ம் திகதியளவில் இராமேஸ்வரம் ஊடாக சிவா இலங்கை திரும்பினர்.

மறுநாள் நவாலி மகாவித்தியாலய அதிபர் திருமதி ஆறுமுகராசா, மகள் கல்யாணி ஆகியோரும் நாமும் பழனி புறப்பட்டோம் – திருச்சியிலிருந்து பழனி செல்வதற்கு திண்டுக்கல் பஸ்ஸில் செல்ல வேண்டும்–பஸ்ஸுக்கு 4 ரூபா 80 சதம். நாலரை மணி நேரப் பயணம். திண்டுக்கல்லிலிருந்து பழனி சென்றோம்-3 மணி நேரப் பயணம். பஸ்ஸுக்கு 2 ரூபா 60 சதம்!

பிற்பகல் 6-45 மணியளவில் பழனி சென்றடைந்ததும். குதிரை வண்டிக்காரரின் தொல்லை அதிகமாயிருந்தது. பஸ் நிலையத்திலிருந்து கால் மைல் தொலைவில் முருகன் சந்நிதிக்குச் சொந்தமான விடுதி இருக்கிறது. இரண்டு குதிரை வண்டிகளில் ஏறிக் கொண்டோம். இரண்டுக்கும் பத்து ரூபாய் என்று பேசிக் கொண்டபோதிலும் ஆலய விடுதியைச் சென்றடைந்ததும் 14 ரூபா கேட்டனர். கொடுக்க மறுத்தபோது பொருட்களை கிழே இறக்குவதில் தாமதப் படுத்தினர். நான் உரத்துப் பேசியதும் பொருட்களை இறக்கிவிட்டனர்.

பழனி சந்நிதியின் நிர்வாகத்திலுள்ள விடுதியில் சகல வசதிகளும் இருக்கிறது. 5 ரூபா முதல் 45 ரூபா வரை அறைகளில் வாடகைக்குண்டு. 45 ரூபா அறை குளிரூட்டப் பட்ட நவீன வசதிகளையும் கொண்டது. நாம் இரண்டு அறைகளில் தங்கினோம்–வாடகை தலா 10 ரூபா!

விடுதியிலிருந்து சுமார் 300 யார் தொலைவில் ஆலயம் இருக்கிறது. இங்கிருந்து பார்த்தால் மலை உச்சியில் முருகன் ஆலயம் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும். ஆலயக்கோபுரத்தில் ஓம் என்ற பிரணவம் பார்ப்போரின் உடலை மெய்சிலிர்க்கச்செய்யும்.

சந்நிதிச் சத்திர ஹோட்டலில் இரவு உணவு உண்டோம். அறைக்குத் திரும்பி வந்தபோது எமக்காக ஒருவர் காத்திருந்தார். முருகனுக்கு அபிஷேகம் செய்வதற்கு பாலுக்கு 'ஆடர்' கொடுக்க வேண்டும் என்றார். ஒரு குடம் 5 ரூபா மூதல் 25 ரூபாவரை விற்பனையாகிறது என்றார். 10 ரூபா கொடுத்து ஒரு குடம் பாலுக்கு ஒழுங்கு செய்தோம்.

மறுநாள் அதிகாலை நாலு மணிக்கெல்லாம் வெந்நீரில் நீராடிவிட்டோம். ஒருவர் குளிப்பதற்கு 50 காசு கொடுத்தால் வெந்நீர் தருவார்கள். குளியலறைக்குப் பக்கத்தில் பெரிய தகரமொன்றில் எந்நேரத்திலும் சுடுநீர் தயார் நிலையிலிருக்கும்.

ஆலயத்திற்கு எம்மை அழைத்துச் செல்வதற்கு வழிகாட்டி தேவைப்பட்டால் சந்நிதி விடுதியைச் சேர்ந்த வரைக் கூட்டிச்செல்லுமாறு விடுதி நிசப்ஷனில் சொல்லியிருந்தார்கள். அதன் பிரகாரம் வழிகாட்டி தேவை என்று காலையில் ஒருவரைத் தருமாறு எம்மிடம் வந்தவரிடம் கூறி விட்டோம்.

சொற்ப நேரத்தில் எம்மை வெளியே அழைத்துச்சென்ற அதே நபர் வாயிலில் காத்து நின்ற ஒருவருடன் எம்மை அனுப்பிவைத்தார் பாலுக்கு 'ஆடர்' கொடுத்த இடத்தில் பால் குடத்தை எடுக்கச் சென்றோம். அங்கு நான் ஏற்கனவே கூறியதுபோல் நாகூர் தர்க்கா மசூதியில் நடந்த சம்பவம் போன்ற அனுபவம் காத்திருந்தது.

அந்தக் கடைக்காரர் அபிஷேகப் பொருட்களை வாங்கும் படி வற்புறுத்தினர். பால் குடத்துடன் தேங்காயும் வாழைப்பழமும், வெற்றிலை பாக்கும், சூடமும் தரும்படி கேட்டோம்.

கதிரை ஒன்றில் எம்மை அமரச்செய்த அந்தக்கடைக்காரர் மளமளவென்று ஏற்கனவே சிறிய சிறிய பார்சல்களாகக் கட்டப்பட்டிருந்த சில பொருட்களை ஒரு பெட்டியில் போட்டனர். மொத்தம் 27 ரூபா தரும்படி கணக்குச் சொன்னார்கள். இவ்வளவு பொருட்கள் தேவையில்லை என்று நாம் சொன்னோம். இதைவிடக் குறைவாக எங்குமே வாங்கமாட்டார்கள் என்றார் அவர்.

10 ரூபாவுக்கு பால் வாங்கியுள்ளோம். தேங்காயும் 5 பழமும், 5 வெற்றிலையும் பாக்கும் சூடமும் மட்டும் தரும்படி கேட்டோம்–முருகனுக்கு விபூதி அபிஷேகம் செய்ய வேண்டும் என்றார்கள். சிறிய விபூதிபாக்கெட்டைத் தாருங்களேன் என்றேன்.

விபூதி அபிஷேகம் செய்யப் போதாதே சென்றார்-பால் அபிஷேகம் செய்கிறோம் தானே என்றேன்.

பால் அபிஷேகம் வேறு; விபூதி அபிஷேகம் வேறு என்று அதற்கு ஒரு 'புதிய கண்டுபிடிப்பு' விளக்கத்தைத் தந்தனர் கடைக்காரர். நாம் கேட்கும் பொருட்களை மட்டும் தந்து எம்மை அனுப்பினால் போதும் என்று கண்டிப்புடன்

(9–ம் பக்கம் பார்க்க)

நாவலர் பிள்ளைத்தமிழ்

வ. குகசர்மா

பிள்ளைத்தமிழ் பதினெட்டு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. இப்பிரபந்தம் தமிழ் இலக்கியத்திற்கே உரிய சிறப்பு அம்சமாகும். குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமார சாமிபிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் எனப சிறந்த பிள்ளைத்தமிழ் பிரபந்தங்களுள் சிலவாகும்.

பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் பலவும் கடவுளரைச் சுட்டியே எழுந்ததெனலாம். ஒரு சில இறைவன் அடியார்களையும் குறித்து எழுந்தன. உதாரணமாகச் சேக்கிழார் பிள்ளைத்தமிழைக் குறிப்பிடலாம். இந்தவகையில் எழுந்ததே 'நாவலர் பிள்ளைத்தமிழ்' ஆகும்.

இந்த நூலின் ஆசிரியர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் முன்பு 'மாவைப் பிள்ளைத் தமிழ்' என்னும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார். இந்த நூலை மாவை முத்தமிழ் மன்றத்தினர் அச்சு வாகனமேற்றி மாவை முருகன் கோவிலில் அரங்கேற்றி வைத்தனர். காலஞ்சென்ற சைவத்திருவாளர் சு. நடேச பிள்ளை அவர்கள் அந்த நூலிற் களித்த அணிந்துரையில் ஒரு பகுதியை இங்கே தருதல் பொருந்தும்.

''யாழ்ப்பாணத்தில் தோன்றிய புலவர்கள் கோவை, குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந்தங்களை இயற்றியிருப்பினும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் இயற்றியிருப்பதாகத் தெரியவில்லை. இக்குறையைத் தீர்க்கும் பெருமை பண்டிதர் மு. கந்தையாவைச் சார்வதாகும்''

முருகப்பெருமான் மீது கொண்ட நிறைவுற்ற அன்பு 'மாவைப் பிள்ளைத் தமிழ்' தோன்றக் காரணமாயிற்று. அதே போன்று தமிழின் மீது கொண்ட அளவற்ற ஆர்வமும் நாவலர் பெருமான் மீது கொண்ட பக்தியும் 'நாவலர் பிள்ளைத் தமிழ்' தோன்றக் காரணமாயிற்று.

நாவலர் பிள்ளைத் தமிழைப் படிக்கும் போது, நாவலர் பிறந்த இடமான நல்லூர்த் திருநகரின் வரலாற்றுப் பெருமையை அறிந்துகொள்ளமுடிகிறது. நல்லூர் முருகன் கோவிலே புவனேகவாகு மன்னன் கட்டுவித்தான் எனக் கூறும் நூலாசிரியர், அந்த மன்னன் மாவிட்டபுரத்தில் முருகன் கோவிற் குருவாக அமைந்த சின்னமனத்தான் என்பவர் அளித்த விருந்தை உண்டு. அதைப் புகழ்ந்து செய்யுள் பாடிய தொடர்பையும் எடுத்துக்காட்டுகிறார். நல்லூரைத் தலைநகராகக் கொண்ட செகராசசேகரன் என மறுபெயர் கொண்ட சங்கிலி அரசனின் வீரத்தையும் இந்நூலாசிரியர் மறக்கவில்லை; செகராசசேகரன் அக்காலத்தில் நாடு பிடிக்க ஆசை கொண்டு போர்த்துக்கேயரை எதிர்த்து நின்றான். தன்மான உணர்ச்சியை வெளிக்காட்டி பகைவர் இரத்தம் கொப்பளித்துப் பாயும்படி, அவர்களிற் பலரைக் கொன்றும் இறுதியில் பகைவர்சூழ்ச்சியால் அவன் அரசு அழிந்தது. அவனும் அழிந்தொழிந்தான். என்றாலும் அவன் காட்டிய வீரத்தை தமிழர் மறக்கமுடியாது.

'பகைஞர் குருதிக்
கொளிப்பினெதிர்
பகர்தன் மானங்
கொப்பளிப்பச்
செய்யுஞ் சமரிற்
சிதைந்தழிந்த
செகரா சச்சே கரன்மரபு
திருவோங்கிட வீற்
றிருந்த புகழ்
தேங்குந் திருவார்
பெருநல்லூ.

என்னும் செய்யுளடிகள் நல்லூப் பெருமைக்கு ஒரு காரணமாயிருந்த அரசர் புகழ் கூறுவன.

நல்லூரில் அரசர் ஆட்சிக் காலத்தில் வீரம் மாத்திரமல்ல, பல கலைகளும், பல செல்வங்களும் அன்பும் அறனும் தழைத்தோங்கிய செய்தியை இப் பிள்ளைத் தமிழ் வாயிலாக அறியமுடிகிறது.

நாவலர் தோற்றிய நல்லூருக்குப் பெருமை கொடுப்பது முருகன் கோவில். நாவலர் கடமை தவறாத வீரர். அது போலவே நல்லூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானும் அடியார்களுக்கு நேரம் தவறாமல் காட்சி கொடுப்பதில் சிறந்தவராக விளங்குகின்றார். திருவிழாக்களிற் சிறந்தது தேர்த்திருவிழா. அந்த விழாவில் 'நாழிகை வட்டில்' என நூலாசிரியரால் குறிக்கப்படும் மணிக்கூடு எட்டு மணி அடிக்க, தேரை நோக்கி எழுந்தருளி வரும் முருகப்பெருமான் வெளிவாசற் திருப்படியைக் கடந்து வருவார் இந்த அழகை நூலாசிரியர்

...நாழிகைவட்டில்
எட்டிக்கச் சண்முகவேல்
ஏர்மருவு திருப்படியை
எட்டியடி வைக்குமெழில்
என்றுமரு நல்லூரில்'

எனக்கு கூறும் அழகு குறிப்பிடத்தக்கது.

நாவலர் ஓர் அவதார புருஷர் என்பது தமிழர் யாவரும் ஒப்புக்கொண்ட உண்மை. அந்த அவதாரத்திற்குரிய காரணம் இப்பிள்ளைத்தமிழில் சிறப்பாக எடுத்துக்கூறப்படுகிறது.

தமிழும் சைவமும் ஒன்றே டொன்று தொடர்புடையது.

சரித்திரமறியாப் பண்டைக் காலம் தொட்டே தமிழர் சைவசமய நெறியில் நின்றுவந்தார்கள். இடையிலே வந்த மேல் நாட்டினர் பொருத்தமில்லாத வேறுமார்க்கமாகிய படுகுழிகளில் விழுந்துவிடாது தடுக்கவே சன்மமெடுத்தவர் என்ற பொருத்தமான சிறந்த காரணத்தைஆசிரியர் எடுத்துக் காட்டுவது தெளிவாக வாசிப்போர் மனதில் பதிவதாக உள்ளது. நாவலர் பிறப்பிற்கு இதை விட சிறந்த காரணத்தை யாராலும் சொல்லமுடியுமா?

''சிவதன்ம மடுத்த சகத்தி
யல் வாழ்வு
தனந்து தமிழ் மரபோர்
சார்பில் தாயிடை சார்ந்து
விடாது
தடுத்து நிறுத்திடவே
சென்ம மெடுத்த சிவத்திரு
நாவல
செங்கே செங்கீரை''

நாவலருடைய சிறந்த தன்மைகள் ஆங்காங்கு பல பாடல்களிலும் பரந்து கிடக்கின்றன. அவர் ஒவ்வொருநாளும் செய்யும் சிவபூசையின் சிறப்பும் எடுத்துப்பேசப்படுகிறது. ஒருவர் கல்வியறிவுடையவராயினும் அதற்கேற்ற நற்குண நற்செய்கைகள் இல்லாவிட்டால் நாவலரின் மதிப்பைப் பெறமுடியாது. பிறர்செய்யும் வெகுமதியை விரும்பாதவர் நாவலர். ''அவ்விதமான வெகுமதி சமயப் பணியின் ஆற்றலைக் குறைக்குந் திறனுடையது'' என்பது அவர்கருத்து. இவ்வாறான நாவலரின் சிறப்புகள் இலக்கிய நயத்துடன் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

உருவகம், உவமை ஆகிய அணிகள் நாவலரின் பெருமையைப் போற்ற எடுத்தாளப் பட்டுள்ளன. ''நற்சமயமான பயிர் தழைக்க வருமேகமே'' என உமையம்மையாரை நோக்கிப்பாடினர், தாயுமானவர். முகிலிலே எம்பிராட்டியின் திருவருளைக் கண்டார் மணிவாசகர். இங்கே நாவலரை ஞானமழை பொழியும் மழை முகிலாக உருவகிக்கிறார் இந்த நூலாசிரியர். அவருடைய கலையனுபவம்-கடல்; அவரின் குணம் குன்று; கருக் கொண்ட முகில்– நாவலரின் உணர்வின் அடர்த்தி; அவரின் விவேகத்துடிப்பு-மின்னல்; அவருடைய கண்டனங்கள் அச்சம் கொடுக்கும்இடி. பிரசங்கம்- ஞானமழை; அதனால் வீழ்வோரும் பயிர்– சைவம் இந்த உருவகச் செய்யுளைக் காண்போம்.

''காலங் கடந்த கலாநுபவக்
கடலைச் சுவற்றி முகந்
தெழுந்து
கனத்த உணர்வின் செறி
வடர்ந்து
கனிந்து விவேகத் துடிப்
புருவாங்
கோல மின்னற் கொடிபட
ரக்
குணக்குன் றேறி யிடித்
துரறிக்
கோதில்சைவ இளம்பைங்
கூழ்
கொழித்துச் செழிக்கக்
குதுகலித்திஞ்
ஞாலம் முழுதும் குளிர்
தூங்க
ஞாலப் பெயலாய்ப்
பொழிமுகிலே''

இது வருகைப் பருவத்தில் உள்ள ஒரு பாட்டு. அம்புலிப் பருவத்தில் நாவலருக்கும் சந்திரனுக்கும் பொதுத்தன்மைகள் பொருத்தமுறைப் பல உவமைகள் கூறப்பட்டுள்ளன. சந்திரனே பதினாறு கலைகளாகிய செல்வத்தையுடையவன். ஆகவே கலாநிதி என அழைக்கப்படுகிறான். நாவலரோ கலை ஞானங்களை தனது செல்வமாக உடையவர் என்ற கருத்தமைய ''கலாநிதி'' என்று ஆசிரியர் கூறுகிறார். இக்காலத்தில் கலைகளில் ''டாக்டர்'' பட்டம் பெற்றவர்களை கலாநிதி என அழைக்கும் வழக்கமும் இச்சொல் நயத்திற்கு மெருகு ஏற்றுகிறது. இருளகற்றுதல், எல்லோராலும் விரும்பப்படுதல் என்பனவும் பொதுத்தன்மைகளாக எடுத்தாளப்பட்டுள்ளன.

பரசமயத்திலிருந்து திருநாவுக்கரசரை மீட்டு, சமயத் தொண்டு செய்யத்தூண்டியவர் திலகவதியார். ''தூண்டுதவ விளக்கனையார்'' எனச் சேக்கிழாரால் குறிப்பிடப்படுகிறார். நாவலர் அடிக்கும் விளையாட்டிற்காய சிறுபறையும், அந்தநேரம் மயக்கிய பரசமய வழியிற் மக்களைப்போக விடாமல் அவர்கள் உள்ளத்தைச் சைவநெறியிற் தூண்டிய ஓசையை சிறுபறைப் பருவத்தில் பார்க்கிறோம்.

''தரணியீர் யாவதும் தேம்ப
வீர் சோம்பவீர்
தவிப்பொடு துடித்தெழு
மினே
சமயமிது சமயநற் றருண
மிது தருணமென்
தக வினது கரண வோசை
சற்சமய சன்மார்க்க சாதக
ருளத்தொரு
தனிப்பறை முழக்க
உண்மைச்
சிமயமென நிற்கவல செம்
பொருட்
சிறுபறை முழக்கிய
செல்வநீ''

என்னும் செய்யுளடிகளை உதாரணத்திற்குக் குறிப்பிடலாம்.

''யாழரசி மணிமுடிக்கண்
மின்னுகை மின்னெளிர
மேவு
மாமணி'' யாக நாவலரை கண்ட இந்த நூலாசிரியரின் கருத்துக்கள் போற்றுதற்குரியன.

நாவலர் பிள்ளைத் தமிழ் எதிர்காலத்தவர்க்கு ஒரு சிறந்த இலக்கிய நூலாகவும், அதே சமயம் வரலாற்று நூலாகவும் பயன்படுமென்பதில் ஐயமில்லை. இந்நூல் வெளிவருவதற்கு ஆவன செய்ய வேண்டியது நாவலரோடு சமபந்தமுடைய சபைகளினது கடமையாகும்.

REGAL (JAFFNA)

ஜனத்திரள் நிறைந்த கடைசித் தினம்

Daily at 4 45, 7-00 & 9-30 p.m. only

அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.

For All Good Children From 8 to 80!

"CIRCUS"

(A Full Length Circus Film) (Color)

From 9-5-77 ALFIE DARLING

பரீட்சையில் சித்திபெற...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

(அ) அவ்விரிவுரையில் ஒரு முகச் சிந்தனையைச் செலுத்த முடியும்

(ஆ) தெளிவற்ற கருத்துக்களை விரிவுரையின் போது தெளிவாக்கிட முடியும்.

(இ) உங்களது முழுக் கவனமும் விரிவுரையிலேயே ஈடுபட்டிருப்பதனல் பகற்கனவு காண்பதைத் தவிர்க்க முடியும்.

2. திறனுய்வு சார்ந்த முறையில் ஒவ்வொரு பாடத்தினையும் அணுகவும்.

3. விரிவுரையாளர் விரிவுரை நிகழ்த்தும்போதும் என்னென்ன விடயங்களைக் கூறப் போகிறார் என்று முன்மதிப்பீடு செய்யவும். இம் முன்மதிப்பீடு செய்து ஒப்புநோக்குவதினல் அவ்விரிவுரைத் தொடர் இணைப்புக்குரியது. இத்தொடர் இணைப்பு பகற்கனவு காணுதலை தவிர்க்கின்றது.

4. விரிவுரை நிகழும் போது, குறிப்பெழுத வேண்டாம். விரிவுரை நிகழும் போது குறிப்பெழுதுவதினல்

(10-ம் பக்கம் பார்க்க)

கணபதி...

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

அகரத்திற்கு பிரமனையும், உகரத்திற்கு திருமாலையும், மகரத்திற்கு உருத்திரனையும், வித்துவிற்கு மகேசனையும், நாதத்திற்கு சதாசிவனையும், பிரணவத்தின் ஐந்து கூறுகளுக்கும் உரிய அதி தேவதைகளாக சிவஞான போதம் உணர்த்துகிறது.

"கணபதி" என்பதன் பொருள் வருமாறு:

"க" : போதல் (அதாவது ஞான நெறியில் எழுதல் என்பது பொருள்). "ந" -மோட்சம். "பதி" - பரம்பொருள். அதாவது ஞானநெறியில் நின்று எய்தப்பெறும் பரம்பொருள் என்பது பொருள். கணேசர் என்பதும் இப்பொருளதே.

"ஏகந்தர்" அளவில்லாத பெரிய ஆற்றலையுடையவர் எனவும்

"ஏரம்பர்" இளைத்தவர்களை இடையூறு நீக்கி பாதுகாப்பவர் எனவும்;

"லம்போதரர்" எல்லா உலகங்களும் இடையூறு எய்தாமே பாதுகாக்கும் சரித்த

(10-ம் பக்கம் பார்க்க)

பழனி...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னேன் நான் – எப்படியோ ரூபா 10-க்கு அரிச்சனைப் பொருட்களை எமக்கு விற்றுவிட்டார்கள்.

தொடர்ந்து சந்நிதியில் பதிவுசெய்யப்பட்டதாக எமக்கு அறிமுகம் செய்யப்பட்ட அந்த வழிகாட்டி எம்மை மலை உச்சிக்கு அழைத்துச் சென்றார். அவர் அங்கு நடாத்திய திருவிளையாடல்களை அடுத்த வாரம் சொல்கிறேன். (தொடரும்)

ராணி யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

புரட்சித்தலைவர்

எம். ஜி. ஆர் ∴ லதா

(இரு வேடங்களில்)

நிர்மலா ஃஃ நாகேஷ் ஃஃ ராஜ்ஸ்ரீ

கஜேந்திரா பிலிம்ஸாரின்

நான் நமதே

(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி

[மானிப்பாய்]

தினசரி 6-30, 9-30

சனி, ஞாயிறு 2-30

சிவாஜி— சௌகார்ஜானகி

பார்மகளேபார்

புலோலி சினிமாஸ்

(பருத்தித்துறை)

தினசரி 2-30, 6-30, 9-30

சனி ஞாயிறு 10-30

பாலச்சந்திரன் – சுபாஷினி

பெண்மணி

97-வது வெற்றித் தினம்!

மனேகரா (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர் • ராதாசலூஜா வீரப்பா • நிர்மலா

தினசரி 4 காட்சிகள் நடித்த

இதயக்கனி

(ஈஸ்ட்மன்கலர்)

கடைசி சில தினங்கள்

ஸ்ரீதர் ஃஃ சிவாஜி (இருவேடம்)

(யாழ்ப்பாணம்) ஃஃ ஜெயலலிதா ஃஃ சுந்தரராஜன்

தினசரி 4 காட்சிகள் நடித்த

பாட்டும் பரதமும்

(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ்

(சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

சிவாஜி-ஜெயலலிதா

கலாட்டா கல்யாணம்

RIO NOW SHOWING

(Jaffna) Daily 4 Shows

OUR MAN IN HAWANA

(Suspense – Thrill)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∴ உஷா நந்தினி

(இரு வேடங்களில்)

சௌகார் ஜானகி, ∴ சுகுமாரி நடித்த

சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்

விஜயவேல் பிலிம்ஸாரின்

மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

வெலிங்டன் ஃஃ முத்துராமன் ஃஃ சுஜாதா

[யாழ். நகர்] நடித்த

தினசரி 4 காட்சிகள்

வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா

[யாழ். நகர்] நடித்த

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,

சொர்க்கத்தில் திருமணம்

(கலர்)

வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்!

இது ஞானவேல்! யாவும் நிறைந்த தங்கவேல்!

வருக! வருக! நீ மயிலேறி வருக!

தென்னகத்தில் திரையிடப்பட்ட திரையரங்குகளில் கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி. முழக்கம் இட்டதே! தேவரின் "திருவருள்"

திருவருளே தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளே காணுத கண்ணென்ன கண்ணே?

ராஜா- யாழ்நகர் தினசரி 4 காட்சிகள்

நடிப்புச்சுடர்: ஏ. வி. எம். ராஜன்

திருமுருக கிருபானந்தவாரியார், நாகேஷ், சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன், ஜெயா, பேபி இந்திரா நடித்த

தேவரின் எண்ணத்தில் உருவாகிய ஈஸ்ட்மன் வண்ணத்தில் மலர்ந்திருப்பதுதான்!

தேவரின்

திருவருள்

(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: ஆர். தியாகராஜன்



இசை: குன்னக்குடி வைத்தியநாதன்

கதை வசனம்-தயாரிப்பு: சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர்

சட்டமும் சமுதாயமும் — 15

மேல் நீதிமன்றமும் சட்டத்தரணிகளும்

மேல்நீதிமன்றம் இலங்கைக்குப் புதியது. பழைய நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் (கோட்ஸ் ஒடினன்ஸ்) இந்தப் பெயர்பூடைத்த நீதிமன்றம் எதுவும் இருக்கவில்லை. நீதித்துறையில் பாரிய ஒரு மாற்றத்தினை ஏற்படுத்திய நீதிநிருவாகச் சட்டம் (1973 ஆம் 44ஆம் இலக்கச் சட்டம்) ஏலவே நிலவிவந்த சில நீதிமன்றங்களை ஒழித்தது. கிராம நீதிமன்றங்களும் விண்ணப்ப நீதிமன்றங்களும் குற்றவியல் மேன்முறையீட்டு நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அவ்வாறு ஒழிக்கப்பட்டன. மேல்நீதிமன்றம் என்ற ஒன்று புதுவதாக உருவாக்கப்பட்டது.

மேல்நீதிமன்றத்தை ஆங்கிலத்தில் "ஐகோட்" (High-Court) என்கிறார்கள். High-Court ஐ மேல்நீதிமன்றம் என்று மொழிபெயர்ப்பது பிழைஎன்பது ஒருசில சட்டத்தாணிகளின் வாதம். High Court ஐ "உயர்நீதிமன்றம்" என்றும் Supreme-Court ஐ "உச்சநீதிமன்றம்" என்றும் மொழிபெயர்க்கலாம் என்று இவர்கள் கூறுகிறார்கள். இந்தியாவில் இப்படி மொழிபெயர்க்கம் பட்டிருப்பதாக அவர்கள் சான்றும் காட்டுகின்றார்கள். ஆனால் நீதிநிருவாகச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் Supreme Court என்பதை உயர் நீதிமன்றம் என்றே கூறியும் எழுதியும் வந்தோம் என்பதை இவர்கள் மறந்து விட்டதாகத் தெரிகிறது. காலாகாலமாக சுப்பிரீம் கோட்டைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டு வந்த "உயர்நீதிமன்றத்தை" உதறித் தள்ளுவது உபாயமாகாது என்பதை உணர்ந்தான் சட்ட மொழி பெயர்ப்பாளர்கள் "உயர்நீதிமன்றம்" என்ற சொற்றொடரைத் தொடர்ந்தும் வைத்திருப்பதாகத் தெரிகிறது.

"உச்சநீதிமன்றம்" எனச் SuPreme Court ஐ ஏன் அழைக்கலாகாது என்று சிலக் கேட்பதில் அர்த்தம் இருப்பது போலத் தோன்றினாலும் அதில் பொருள் இல்லை என்பது நுணுகி நோக்கு வாருக்குப் புலனாகும். உச்சம் என்பது விஞ்சமுடியா மேல் எல்லையைக் குறிக்கும் ஒரு சொல். இன்றுள்ள நிலையில் Supreme Court தான் மீயுயர் நீதிமன்றமாக உள்ளது. ஆனால் இந்த நீதிமன்றத்தினும் பார்க்க அதிகாரம் மிக்க நீதிமன்றம் இன்று இலங்கையில் தோற்றுவிக்கப்படவும் கூடும். அன்றைய உயர்நீதிமன்றத்தினது அதிகாரத்தினும் பார்க்க கூடுதலான அதிகாரம் படைத்த மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் 1974 க்கு முன்னர் இருந்தன என்பதை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அப்படியான ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் Supreme Court ஐ உச்ச நீதிமன்றம் என்பது பொருத்தமாக இராது என்பதைக் கருத்திற்கொண்டே Supreme Court உயர்நீதிமன்றம் எனப்படுகின்றது என்றவாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மேல்நீதிமன்றம் பற்றிய பூசலும் புகையும் இப்போது ஓய்ந்து விட்டது. "சட்டத்தரணி"யை ஆட்சேபித்த சட்டத்தரணிகள் பலருடையவாய்களில் மேல்நீதிமன்றம் இப்போது நன்றாக நுழைகின்றது அவர்களும் மேல்நீதி மன்றத்துக்குள் நன்றாக நுழைந்து குழைந்து பிழைத்து வருகிறார்கள்.

மாவட்ட நீதிமன்றத்திற்கு அடுத்த மேற்படியிலுள்ளது மேல்நீதிமன்றம். ஒரு நீதிநிருவாக வலயத்திற்கு ஒரு மேல் நீதிமன்றம் என்ற அடிப்படையில் இலங்கையில் 16 மேல் நீதிமன்றங்கள் உள்ளன. கொழும்பு, களுத்துறை, காலி மாத்தறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், சிலாபம், நீர்கொழும்பு, கம்பஹா, கேகாலை குருநாகல், கண்டி, அவிசாவளை, இரத்தினபுரி, பதுளை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இவை அமைந்துள்ளன. ஒரு வலயத்திற்கென நியமிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் வழமையான அதன் இடத்தில் எப்போதும் அமராது பொதுமக்களின் வசதிக்காக, இடைஇடையே வேறு இடத்தில் அமர்தலும் உண்டு. யாழ்ப்பாணத்துக்கான மேல் நீதிமன்றம் சில சமயங்களில் வவுனியாவில் அதன் அமர்வுகளை நடாத்துவதை உதாரணமாகக் கூறலாம்.

ஒரு வலயத்துக்கு ஒரு மேல் நீதிமன்றம் என்று வகுக்கப்பட்டிருப்பினும் கொழும்பு வலயத்துக்கான மேல் நீதிமன்றம் ஒன்றல்ல; இரண்டு. தலைநகரில் குறறங்களின் எண்ணிக்கை அதிகம் என்பதாலேயே கொழும்பில் இரண்டு மேல் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நீதிவான், மாவட்ட நீதிபதி ஆகியோருக்குரிய எல்லாத் தத்துவங்களும் நியாயாதிக்கமும் மேல் நீதிமன்ற நீதிபதிக்கும் உண்டு. அதோடு நீதிவானுக்கோ நீதிபதிக்கோ இல்லாத பல தத்துவங்களும் அதிகாரங்களும் இவருக்கு உண்டு.

தடைக்கட்டளைகள் (இன்யங்ஷன்ஸ்) வழங்குவதற்கான தத்துவம் நீதிவானுக்கோ மாவட்ட நீதிபதிக்கோ கிடையாது; மேல் நீதிமன்ற நீதிபதிக்குண்டு.

முன்பெல்லாம், தேர்தல் ஆட்சேபனை மனுக்களை ஏற்றுக் கவனித்து விளங்குவதற்கான நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றத்திற்கு இருந்தது. இந்த நியாயாதிக்கம் இப்போது மேல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குற்ற வழக்குகளை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கின்ற அதே மாதிரியாகத்தான் மேல் நீதிமன்றத்திலும் தொடுக்க வேண்டும். அதாவது 'குற்றப் பத்திரிகை என்றும் குற்றப் பகர்வு என்றும் வழங்கப்படும் இன்டைற்மென்ற் மூலமே குற்ற வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்படுகின்றன. வழக்கைத் தொடுப்பவர் பிரிங்கக் குற்ற வழக்குகள் பணிப்பாளர்தான் என்பது வாசகர்களுக்குத் தெரியும். பாராளுமன்ற உறுப்பினர்களான கே. துரைரத்தினம், கா. பொ. இரத்தினம், வி. என். நவரத்தினம் ஆகிய மூன்று இரத்தின்களுக்கும், அமிர்தலிங்கம் அவர்களுக்கும் எதிரான வழக்கு, பிரிங்க வழக்குகள் பணிப்பாளரால் குற்றப்பத்திரத்தின் மூலம் தொடுக்கப்பட்டது என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

மாவட்ட நீதிமன்றத்திலும் மேல் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுக்கும் முறை ஒன்றேயாயினும் நடைடிக்கை முறையில் வேறுபாடு உள்ளது. மாவட்ட நீதிமன்றத்தில் யூரிமார் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால், மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் குற்ற வழக்குகளுக்கான விளக்கங்கள் ஒவ்வொன்றும், மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் முன்னிலையில் நிகழ்வுகளின் நீதிபதிகள் எனப்பெறும் யூரர் சபையின் உதவியுடன் நடைபெறும். ஆனால், குற்ற வழக்கு விளக்கங்கள் எல்லாமே யூரர் சபையின் முன்னிலையில் நடைபெறும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள், யூரர் சபை இல்லாமல், மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'குழாத்து விளக்கத்தின் மூலம்' (Trial at Bar) விளங்கப்பட வேண்டும் என அமைச்சர் பணித்தால், அத்தகைய விளக்கம் யூரர் சபை இல்லாமலே நடைபெறும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கு இத்தகைய விளக்கமாக அமைந்தது என்பதை இங்கே சுட்டவேண்டியதில்லை.

ஒருவகையில் பார்க்கப் போனால் அன்றைய உயர் நீதிமன்றம்புரிந்த பணிகள் எல்லாவற்றையும் இன்றைய மேல் நீதிமன்றம் புரிகின்றது என்று கூறலாம்.

உயர்நீதிமன்ற நடவடிக்கை முறைகளையும் சொற்பிரயோகங்களையும் இனி வரும் கட்டுரையில் பார்ப்போம்.

செ. சிறிக்கந்தராசா

பரீட்சையில்—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரைத் தொடர் இணைப்புக் குலைந்துவிடும். விரிவுரை முடிந்ததும் குறிப்பெழுதவும். இக் குறிப்புக்களைப் பாடப் புத்தகத்துணையுடன் விரிவு படுத்தவும்.

5. ஐயமுள்ள பகுதிகளுக்கு விடுவுரையாளரிடமிருந்து விளக்கம் கோரவும், நண்பர்களுடன் பாட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவும். அவர்கள் மத்தியில் ஏற்படும் ஐயங்களைத் தெளிவுபடுத்தவும்.

6. விரிவுரையாளர் கொடுக்கும் எல்லா உதாரணங்களையும் குறித்து வைத்திருங்கள். உங்கள் சுற்புனை வளத்தில் ஏற்படும் உதாரணங்களையும் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். பாடங்களை நினைவில் வைத்திருப்பதற்கு உதாரணங்கள் மிகமிக உதவும் என்னதக்கருவிகளாகும்.

7. விரிவுரை முற்றுப்பெறுவிருக்கும் கடைசிப் பத்து நிமிடங்களிலும் விரிவுரையை மிக உன்னிப்பாகக் கவனிக்கவும். குறிப்பிட்ட நேரத்தில் தனது விரிவுரையை முடிக்க முடியாவிடின், அக்கடைசிப் பத்து நிமிடங்களில் பல விடயங்களைக்கூறி அவ்விரிவுரையைப்பூரணமாக்கமுயலுவார். விரிவுரை முற்றுப்பெற்றாலோ, கடைசிப் பத்து நிமிடங்களில், அவ்விரிவுரையின் சாராம்சத்தினை இரத்தினச்சுருக்கமாகப் பொழிவார்.

(தொடரும்)

கூட்டணியில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகராக நிறுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்பட்டுள்ளன. கூட்டணிப் பிரமுகர்கள் இதுபற்றிபேச்சுவார்த்தை நடாத்திவருகின்றனர்.

மானிப்பாய்த் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளரான திரு. முதலியார் சுயேச்சையாகப் போட்டியிட விருக்கிறார்.

கூட்டணி நியமனக்குழு இம்மாதம் 14-ம், 15-ம் தேதிகளில் கொழும்பில் திரு. எம். சிவசிதம்பரம் இல்லத்தில் கூடி மற்றும் தொகுதிகள்பற்றி அறிவிக்கவிருக்கிறது. (க)

அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு கொடிகாமம் மத்திய சந்தை அத்திவாரக் கல்நாட்டுவிழா இம்மாதம் 9ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கச்சாய் கிராமசபை தலைவர் திரு. இ. செல்லையா தலைமையில் கொடிகாமம் சந்தையில் நடைபெறும் இவ்விழாவில் உள்ளூராட்சி, ஆணையாளர் திரு. டபிள்யு. ஈ. வி. எஸ். டி. அல்விஸ் அடிக்கல்நாட்டிவைப்பார்.

தொழில்உதவி கமிஷனருக்கு நன்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். நகரில் விடுமுறை தினமான வெசாக் தினத்தன்று பெரும்பாலான கடைகள் திறந்திருந்ததாகவும்யாழ். உதவித் தொழில் ஆணையாளர் திரு. ஞானப்பிரகாசமும் அவரது உதவியாளர்களும் உடன் நடவடிக்கை எடுத்ததால் எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டு ஊழியர்களும் விடுமுறையைக் களிக்கமுடிந்ததென்றும் இதற்காக உதவி ஆணையாளருக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் வடபிரதேசச் செயலாளர் திரு. எஸ். நடராசா நன்றி தெரிவித்துள்ளதுடன் இனிமேலும் விடுமுறை தினங்களில் இப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

கணபதி—

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தொந்தியர் எனவும்;

"கஜானனர், சூர்ப்பகர்ணர்" அன்பர்களின் இடையூறுகளை நீக்கி கருணைக்காற்றையளித்து மேனேக்கும் உண்மை ஞானத்தை உதவுபவர் எனவும் பொருள்படும்.

கடவுளைப் பூசிக்கும் அன்பர்களுடைய மனம் அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்பப் பல்வேறு நிலைகளில் பல்வேறு திருவுருவ அமைப்பில் ஈடுபடுகின்றது, ஒன்றுகின்றது, உருவேற்றுகிறது. விநாயகப்பெருமானுடையதிருவுருவமும் அன்பர்களுக்காக முப்பத்திரண்டாகப் போற்றப்பெறுகின்றது.

சிற்பவரைவாளர்

ARCHITECTURAL DRAUGHTSMANSHIP

1 வருடகால முழுநேர வகுப்புக்கள், 9 பாடங்கள் கொண்ட இத் தொழில் நெறியை கற்கும் மாணவ, மாணவிகள் உள்நாட்டிலும், பிறநாட்டிலும் அதிக உத்தியோக வாய்ப்பு காண்கிறார்கள்.

விபரங்கட்கு:

காரியதரிசி,

அக்ரே என்ஜினியேஸ்,

135, சென் பற்றிக்ஸ் ரோட்,

யாழ்ப்பாணம்.

வகுப்பு ஆரம்பம்: 23-5-77 6126

வெல்டிங் வகுப்புகள்

அமெரிக்கன் வெல்டிங் சொசாயிற்றியின் (AWS) பாடதிட்டத்தை அனுசரித்து நடாத்தப்படும் A R C வெல்டிங் வகுப்புகளுடன் ஆங்கிலமும் இலவசமாக கற்றுக் கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:

காரியதரிசி,

அக்ரே என்ஜினியேஸ்,

135, சென் பற்றிக்ஸ் ரோட்,

யாழ்ப்பாணம்.

6127

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெல்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.